890

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 JUL 1957
MADRAS

13 பைசா

கண்ணன் கிளைக் கழகம்

மதுரை { உபதலைவர்: பி. என். எஸ். மணியன்
செயலாளர்கள்: விசுவநாதன், சங்கரன்
பொருளாளர்: எஸ். சுப்பிரமணியன்

ஏழு பேர்கள் கொண்ட செயற்குழு அமைக்கப்... பட்டுள்ளது.
(வார இதழ்) நடை
'வெண்ணிலா' என்று கையெழுத்துப் பத்திரிகை
பெறுகிறது. கதைகள் முதலியன, பி. என். பாபு, 16, டவுன் ஹால்
ரோடு, மதுரை என்ற விலாசத்துக்கு அனுப்பலாம்.

திண்டிவனம் { உபதலைவர்: ஆர். சேதுராமன்
செயலாளர்: த. ஷண்முகம்...
பொருளாளர்: கே. ...

...குழு அமைக்கப்பட்டுள்ளது.
பத்துப் பேர்கள் கொண்ட ...கப்பட்டுள்ளது. கோமாளி என்ற
விளையாட்டுக் குழு ஒன்றும் ...கையும், ஜோகர் என்ற ஆங்கிலக்
தமிழ்க் கையெழுத்து...யும் நடத்தப்படுகின்றன. ஆர். சேதுராமன்,
கையெழுத்துப்...ரீத் தெரு, திண்டிவனம் என்ற விலாசத்துக்குக்
56, பெரிய...
கதை...பலாம்.

வெலிமடை (இலங்கை) } உபதலைவர்: ந. தர்மலிங்கம்
செயலாளர்: சு. மோகனசுந்தரம்
உதவிச் செயலாளர்: செ. வைத்திலிங்கம்
பொருளாளர்: க. அம்பிகாபதி

பத்துப் பேர்கள் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. 'கலைச் செல்வம்' என்ற கையெழுத்துப் பத்திரிகை நடத்தப்படுகிறது. விஷய தானங்கள் ந. தர்மலிங்கம், 41, நுரெலியா ரோடு, வெலிமடை. இலங்கை என்ற விலாசத்துக்கு அனுப்பலாம்.

பேனா நண்பர்கள்

1. C. D. A. சேகர், 3. மீனாக்ஷி தெரு, பெரம்பூர், சென்னை-11
2. P. N. S. மூர்த்தி, 10, குறுக்குத் தெரு, சின்ன காஞ்சீபுரம்,
3. K. நடராஜன், 23, பிள்ளையார் கோயில் தெரு, ஆம்பூர் (வ' ஆ.)
4. S. G. ரகுநாதன், 46, செட்டித் தெரு, திருப்பத்தூர், (வ. ஆ.)
5. காசிநாதன், 49, பிள்ளையார் கோயில் தெரு, தரணம் பேட்டை, குடியாத்தம் (வ. ஆ.)
6. N. பக்தவத்ஸலம், C/o C. S நரசிம்மாச்சாரியார். பெரும் பாக்கம் போஸ்டு, (வழி) விழுப்புரம். (தெ. ஆ)
7. E. அரங்கநாதன், 78, தியாகு முதலியார் வீதி, பாண்டிச்சேரி,
8. S. நடன சபாபதி, சேக்கிழார் நிலையம், 20, நயினர் குளம் ரோடு, திருநெல்வேலி.
9. T. R. ஷண்முகநாதன், 'தமிழ் அன்பன்,' சி. எம். டி கடைத் தெரு, சின்னாளப்பட்டி. மதுரை ஜில்லா.
10. K· குபேந்திரன், 4 - A, ராமசந்திரபுரம் முதலாவது சந்து, மதுரை.
11. R. தங்கமணி, 24, L.P. ஷண்முக நாடார் தெரு, விருதுநகர்.
12. K. M. கந்தசாமி, 11, S. V. P. N. S. சிதம்பர நாடார் தெரு, விருது நகர்.

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 8 இதழ்: 12

15 - 6 - '57

குழந்தைகளே! பக்கம் 2
தபால் பெட்டி .. 3
கடற் புலி .. 5
துப்பறியும் மோகன் .. 7
அதிர்வெடி .. 13
பனங்கிழங்கு .. 18
வருங்கால வீரர் .. 24
விடுமுறை இதழ் .. 27
அந்தச் சிலை .. 29
நீங்களும் நானும் .. 37
நல்ல வீடு .. 40
அட்டைப் படம்,
போட்டோ: புஷ்பத்துறை சுப்ரமண்யம்
கிளைக் கழகம் - 2-ஆம் அட்டை

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/25

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

பலூன் போட்டி!



குழந்தைகளே!

கண்ணன் சித்திரப் போட்டியின் முடிவுத் தேதியை மாற்றியிருப்பதைக் கவனியுங்கள். சரியாக ஒரு மாதம் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஜூன் 30-ஆம் தேதியை ஜூலை 31-ஆம் தேதிவரை நீடித்திருக்கிறோம். காரணம் பல ஊர்களிலிருந்தும் வந்த வேண்டுகோள்தான். 'ஃப்ளூ' ஜுரம் என்ற ஒன்று எதையெல்லாம் மாற்றிவிட்டது தெரியுமா? அவற்றில் சித்திரப் போட்டியும் ஒன்று. தபால்களைச் சரிவரப் பட்டுவாடா செய்ய முடியாமலும், தந்திகள் நேரத்துக்குக் கிடைக்க வழியில்லாமலும், பத்திரிகைகள் காலத்தில் வெளிவர முடியாமலும், ரெயில்கள் மணிக் கணக்குப்படி ஓடமுடியாமலும் செய்துவிட்டது இந்தப் பொல்லாத விஷ ஜுரம். பள்ளிக்கூடங்களை யெல்லாம் சென்னையில் ஜூலை முதல் தேதிதான் திறக்கலாம் என்று சர்க்கார் கூறிவிட்டார்கள். பல காரியாலயங்களில் பலர் இந்த ஜுரத்தினால் தாக்கப்பட்டதால் வேலைக்கே வராமல் இருக்க நேர்ந்துவிட்டது. பல பஸ்கள் ஓடாமல் நின்றுவிட்டன. விஷ ஜுரம் பரவுமோ என்று பகல் சினிமாக் காட்சிகளை நிறுத்த நேர்ந்துவிட்டன. சென்னையில் மட்டுமல்ல, வெளியூர்களில் எல்லாம்கூட இந்த ஜுரம் பரவியிருக்கிறது.

இன்புளுவென்ஸா என்ற இந்த விஷ ஜுரம் எப்படி, எதனால், எங்கிருந்து தோன்றியது என்று என்று பலரும் கேட்கிறார்கள். சமீபத்தில் அணுக்குண்டு பரீட்சை ஒன்றை பிரிட்டிஷ் சர்க்கார் நடத்தினார்கள். அணுக்குண்டை வெடிக்க வைத்து அதன் விளைவுகளை ஆராய்ந்து பார்த்ததைத்தான் கூறுகிறேன். பஸிபிக் சமுத்திரத்திலுள்ள கிறிஸ்துமஸ் தீவில் இந்தப் பரீட்சை நடைபெற்றது. அந்த அணுக்கதிர்கள் வெடித்து, காற்றில் கலந்ததனால் இந்த வியாதி பரவியது என்று பலர் கூறுகிறார்கள். முதலில் இது ஜப்பானில்தான் தோன்றியது. அதுதான் அந்தத் தீவுக்கு அருகாமையான நிலப்பகுதி, அங்கிருந்து கீழ்த் திசை நாடுகளில் பரவி, சிங்கப்பூர் கப்பல் வழியாக இந்தியாவுக்கும் வந்துவிட்டது. இன்னும் மேற்கில் உள்ள நாடுகளுக்கும் பரவுவதாகத் தெரிகிறது. வேறு இதற்குக் காரணம் ஒன்றும் இருப்பதாக யாரும் கூற முன்வரவில்லை.

இந்த வியாதியினால் அதிகமான உயிர்ப்பயம் ஒன்றுமில்லை. இதற்குத் தடுப்பு மருந்தும் கிடையாது. ஆனால் விஷக்கிருமிகள் பரவாமல் தடுக்கவும் குறைக்கவும் சில மருந்துகள் பயன்படுகின்றன, 1919-ஆம் வருஷம் இதே இன்புளுவென்ஸா என்ற வியாதி வந்ததாம். அப்போது ஏராளமான பேர்கள் உயிரிழந்தார்கள். ஆனால் இது அந்த வகையைச் சேர்ந்ததல்லவாம். விஷக் கிருமிகள் தொத்திக்கொள்ள இடம் கொடுக்காமல் இருந்தால் அதிகமாகப் பரவாது என்று கூறுகிறார்கள். அதே போல் இப்பொழுது அந்த வேகம் குறைந்திருக்கிறது. நீங்கள் சுகாதாரக் குறைவாக இராமல் தற்காப்புக்கான யோசனைகளைக் கேட்டு நடந்து கொள்ளுங்கள். அதற்காகவே இவ்வளவு விரிவாகச் சொல்கிறேன்.

இனி, சித்திரப்போட்டியில் மற்றொரு சந்தேகத்தைப் போக்க விரும்புகிறேன். ஒரே வீட்டில் உள்ள குழந்தைகள் தனித்தனியாக கூப்பன்கள் அனுப்ப வேண்டுமா என்று கேட்கிறார்கள். அவசியமில்லை. அதே கூப்பன்களில் அவர்கள் பெயர்களைக் குறிப்பிடலாம். இட போதாவிட்டால் கூப்பனோடு வெள்ளைத்தாளை ஒட்டி அதில் எழுதலாட

சென்ற இதழில் கேட்டிருந்தபடி சிலர் தங்கள் பெற்றோர்களுடை யோசனைகளைக் கேட்டு எழுதி வருகிறார்கள். இன்னும் பலரும் எழுத வேண்டும். அப்பொழுதுதான் உங்கள் தேவைகளையும் உங்கள் பெற்றோர்களின் யோசனைகளையும் உணர்ந்து அவற்றைச் செயலாக்க முடியும். கண்ணன் வளர்ச்சி குழந்தைக் குலத்தின் வளர்ச்சி!

—ஆசிரியர்.



எப்படி?

காதொலிக் கருவி எவ்விதம் செய்வது?

—ஆர். தியாகராஜன், குத்தாலம், எஸ். சங்கரலிங்கம், திருச்சி-2 முதலிய நூற்றுக்கு மேற்பட்ட நேயர்கள்.

(காதொலிக் கருவி பற்றிய கட்டுரை அடுத்த இதழில் மீண்டும் வருகிறது. ஆ-ர்.)

திருட்டுகள்

எட்டு எட்டு ஆயிரம் என்ற கணக்கு முன்பு கண்ணனிலேயே வெளிவந்தது. அதைப் பிரசாத் என்ற நண்பர் காப்பியடித்து எழுதியிருக்கிறார்.

—ஆர். பகவதிராஜ், கம்பம்.

வி. ராஜாமணி என்பவர் எழுதிய 'புதிதாக வந்தவர்' வேறு ஒருவர் வேறு ஒரு பத்திரிகையில் எழுதிய கதையின் காப்பி. சம்பாஷணையும் கணவன் – மனைவி என்பதைத் தந்தையும் தனயனும் என்றும் மாற்றப்பட்டுள்ளன. கருத்தும் முடிவும் ஒன்றே.

—ஆ. சீ. ரங்கநாதன், ஆடுதுறை.

(பலமுறை எச்சரித்தும் இவ்விதம் எழுதியனுப்பி யிருக்கிறார் வி. ராஜாமணி. இது மிக மிக வருந்தத்தக்கது. கண்ணனில் இனி இவர் கதை எழுதினால் பிரசுரிக்கப்படமாட்டாது. ஆ-ர்)

விளக்கம்

குழந்தை எழுத்தாளர் சங்கத்தில் சிறுகதைப் போட்டி ஆரம்பிக்கப் போவதைக் கண்டு மகிழ்ந்தேன். எத்தனை பக்கங்கள் வரையில் இருக்கலாம்? ஒரு தாளின் பின் பக்கத்திலும் எழுதலாமா?

—கே. நாராயணன், கல்விடைக்குறிச்சி.

(பக்கக் கட்டுப்பாடு ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை, கதைகளை யாருக்கு அனுப்பினாலும் ஒரு பக்கத்தில்தான் தெளிவாக, மையினால் எழுத வேண்டும். பின்புறம் எழுதலாகாது. ஆ-ர்.)

அளவு என்ன

சித்திரப் போட்டிக்கு எத்தனை அகல நீளத்தில் படம் இருக்க வேண்டும்?

(எவ்வளவு பெரிதாக வேண்டுமானாலும் இருக்கலாம். ஆ-ர்)

இருசொல் அலங்காரம்

கயிறு முறுக்கு ஏறுவதேன்?
கால் வலி எடுப்பதேன்?

தலைமுடி படிவதேன்
தடால் என்று கீழே விழுவதேன்?
—ஆர். எஸ்., சங்ககிரி

(விடை: சுற்றுவதால்; வாரிவிடுவதால்.)

பாராட்டு

'அந்தச் சிலை' என்ற பரிசுத் தொடர்கதை விறுவிறுப்பாக இருக்கிறது.
—ரா. மீனாட்சி, ராபர்ட்சன்பேட்டை.

ஸினிரமா கட்டுரை பிரமாதம். துப்பறியும் மோகன் அருமையாகத் தொடங்கி, அழகாகச் செல்கிறது.
—நா. ரங்கராஜு, ஆதம்பாக்கம்.

பரிசு

நான் இவ்வருடம் பரீட்சையில் வெற்றி பெற்றதற்காக என் நண்பர்கள் நால்வருக்குப் பரிசுகள் அளித்தேன். லீடர் மணி, அசட்டுப் பிச்சு ஆகிய புத்தகங்களில் நாலு நாலுதான் அவை. எப்படி என் பரிசு?
—எம். வி. சுவாமிநாதன். மருத்துவக்குடி.

(பரிசு பெற்றுக் கொண்டவர்கள் மறுக்கமாட்டார்கள் என் நம்புகிறேன். ஆ-ர்)

தமாஷ்

முதல் பைத்தியம்: டேய் கொக்குக்கு ஒரே கால்தானே!

இரண்டாவது பைத்தியம்: போடா பைத்தியம். நம்மைப்போல் கொக்குக்கு மூணு கால்களடா! தெரியுமா?

மூன்றாவது பைத்தியம்: (சிரித்துக்கொண்டு) ஏண்டா பைத்தியங்களா? நாமும் கொக்குகளும் குரங்குகள் என்று நினைப்பா உங்களுக்கு?
—ஆர். செல்வமணி, கடலூர், என். டி.

கூப்பன்கள்

சித்திரப் போட்டிக்கு அண்ணன் தம்பிகள், அக்கா தங்கைகள் ஒரே வீட்டிலிருந்து தனித்தனியே மூன்று கூப்பன்கள் அனுப்ப வேண்டுமா? மொத்தம் மூன்று அனுப்பினால் போதுமா?
—ஜயா, தாம்பரம்.

(ஒரே வீட்டிலுள்ள சகோதர சகோதரிகள் என்றால் மூன்று கூப்பன்களே போதும். ஆ-ர்.)

உயர்ந்த ரகம்!

கண்ணன் பத்திரிகையில் கேள்வி பதில் பகுதி அறிவு வளர்ச்சிக்குரிய பகுதி. ஆனால் மட்டரகமான பதிலை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. 'மாசிலாமணி' (?)யின் கேள்விக்குத் தங்கள் பதில் தமிழ்க் குழந்தை இலக்கியத்துக்கே மாசு கற்பிப்பதாக இருக்கிறது.
—வடமலையழகன், மற்றும் நண்பர் மூவர், புதுக்கோட்டை

(இவ்வளவு உயர்ந்த ரகமாகச் சந்தேகப்படும் நண்பர்களுக்கா[illegible] மாசிலாமணி, (சென்னை-4 அல்ல: 24) கடிதத்தைத் தேடி எடுத்து வைத்[illegible]திருக்கிறேன். வந்து பார்வையிடலாம். கேள்வியையும் என் பதிலையும் நேர்மையோடு மீண்டும் படித்தால் எந்தக் குறிப்பிட்ட நண்பரையும் அது தாக்க முயலவில்லை என்பது தெரியும். இவர்களுக்குச் சந்தேகம் வரும்படியான உண்மை ஏதாவது அதில் இருந்து அவர்கள் ஆத்திரப்பட்டால் அதற்கு நான் பொறுப்பாளியல்ல. ஆ-ர்.)

துப்பறியும் மோகன்

தே. பார்த்தசாரதி

டாக்டருக்குச் சந்தேகம் உண்டாயிற்று. அவர், குளிர்ந்த தண்ணீர் கொண்டுவரச் சொல்லி, அதைத் திவான்பகதூரின் முகத்தில் தெளித்தார். சில நிமிஷங்களில் திவான்பகதூர் மெள்ளப் புரண்டார்.

முனியனைப் பார்த்து, "நீ போய் எதற்கும் பக்கத்து போலீஸ் ஸ்டேஷனில் இருக்கும் இன்ஸ்பெக்டரை அழைத்து வா" என்றார் டாக்டர். முனியன் பதற்றத்துடன், "ஐயையோ, போலீசா, எதுக்குங்க?" என்று குழறினான். "நீ பயப்படாதே, முனியா. இந்தக் கேஸைப் பார்த்தால் எனக்குச் சந்தேகம் தட்டுகிறது. யாரோ ஒரு ஆசாமி வந்தான் என்கிறாயே! அவன் பேரில் எனக்குச் சந்தேகம் உண்டாகிறது. ஆகவேதான் போலீசில் உடனே தெரிவிக்க வேண்டியது நம்முடைய கடமையாகிறது" என்று தெளிவாகக் கூறினார் டாக்டர். முனியன் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடினான்.

அவன் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் தினகரத்தினம் எழுந்து உட்கார்ந்தார். கண்களைக் கசக்கிக் கொண்டே, "...ஆ, டாக்டர்! நீங்கள் எதற்கு இங்கே வந்தீர்கள்? சபாபதி எங்கே?" என்று கேட்டார்.

டாக்டர், "சபாபதியா? அது யார்?" என்று கேட்டார். "அவர் தான் சார், என் நண்பர், சுந்தரம் அனுப்பினதாகச் சொன்னாரே, அவர்!" என்று தினகரத்தினம் கூறியதும் டாக்டர், "அப்படியானால் நீங்கள் ஒன்று செய்யுங்கள். உங்கள் நண்பர் சுந்தரத்துக்கு போன் பண்ணுங்கள். அவர் சபாபதி என்று யாரையாவது அனுப்பினாரா என்று கேளுங்கள்" என்று யோசனை கூறினார். தினகரத்தினம் போன் செய்ய எழுந்தபோது, "டிர்ரிங்..டிர்ரிங்..டிர்ரிங்.." என்று போன் மணி கேட்டது.

தினகரத்தினம் காதில் வைத்துக்கொண்டு, "ஹலோ!" என்றார். அடுத்து அவர் சில நிமிஷங்கள் பேசியதும், அவர் முகத்தில் பீதிக் களை பரவியது. அதைக் கவனித்த டாக்டர், "என்ன சார், என்ன விஷயம்?" என்று விசாரித்தார். போன் ரிஸீவரைத் 'தடால்' என்று கீழே வைத்த தினகரத்தினம், "டாக்டர் சார், அவர் சபாபதி என்ற ஆள் யாரையும் அனுப்பவில்லையாம். அதற்குப் பதில் நான் அனுப்பியதாகச் சொல்லிக் கொண்டு முத்து என்ற பெயரில் ஒருவன் வந்தானாம். முத்து என்ற ஆளை நான் அனுப்பவில்லை என்று கூறியதும் அவர் அப்படியே 'ஆ, இதில் ஏதோ சூழ்ச்சி நடந்திருக்கிறது' என்று அலறியபடியே போனைக் கீழே வைத்துவிட்டார்!" என்றார்.

மணி: யுத்தம் வரவே வராது என்கிருயே, ஹைட்ரஜன் குண்டைப் போட்டுப் பரிசோதனை பண்ணிக்கொண்டு இருக்கிருனே?

கிட்டு: அதுதான் யுத்தம் வரையிலும் வராது. பல இடங்களில் பரிசோதனையிலேயே உலகம் தீர்ந்து போய்விடும் என்கிறேன்.

டாக்டர் புருவத்தை நெரித்தார். ''திவான்பகதூர் சார், உங்கள் பணப்பெட்டியைத் திறந்து எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பாருங்கள்'' என்ருர். திவான் பகதூர் உடனே இடுப்பைத் தடவினுர். 'ஆ!' என்று அலறிவிட்டார். காரணம், சாவிக் கொத்து அவர் இடுப்பில் இல்லை!

''என்ன, சாவியைக் காணுமா? நான் சந்தேகப்பட்டபடியேதான் எல்லாம் நடந்திருக்கிறது'' என்று கூறிய டாக்டர் அந்த அறையில் தம் கண்களைச் சுழலவிட்டார். பணப்பெட்டிக்குச் சற்றுத் தள்ளி சாவி கிடந்ததைக் கண்டதும், அவர் கண்ணில் ஒளி தோன்றியது. ''கவலைப்படாதிர்கள், மிஸ்டர் தினகரத்தினம்! இதோ இருக்கிறது சாவி. 'ஸே'பைத் திறந்து பாருங்கள்'' என்று சாவியை எடுத்துக் கொடுத்தார். அதைப் பெற்றுக்கொண்ட தினகரத்தினம், ஏதோ இயந்திரம் போல் ஸேபைத் திறந்தார். ஸேபில் வரிசையாக 4 தட்டுக்கள் உண்டு. அவற்றில் இரண்டு தட்டுக்கள் காலி!

தினகரத்தினம் இந்த அதிர்ச்சியைத் தாங்கமாட்டாமல், உடல் சோர்ந்து உட்கார்ந்துவிட்டார். அவருக்கு மீண்டும் மயக்கம் வந்துவிடுமோ என்று டாக்டர் உஷாரானுர். இந்தத் திருட்டு எப்படி நடந்திருக்க வேண்டும் என்று ஓரளவு அவருக்குப் புரிந்தது.

திவான்பகதூர், ''ஐயோ, என் பணமெல்லாம் போச்சே! நகையெல்லாம் போச்சே!'' என்று அலற ஆரம்பித்தார். காலி ஸேப் அவரைப் பார்த்து நகைத்தது.

அப்போது அங்கே 'டக் டக்' என்ற பூட்ஸ்களின் ஒலி கேட்டது. ஸி. ஐ. டி. சிவசாமி, மோகன், சப்-இன்ஸ்பெக்டர் சாரங்கபாணி, இரண்டு கான்ஸ்டபிள்கள், ஆகியோர் அப்போது அந்த அறையினுள் பிரவேசித்தனர்.

6. துப்பறியும் மோகன்

அன்றைத் தினம் சப்-இன்ஸ்பெக்டர் சாரங்கபாணி, வரும்போதே கையில் ஓர் அவசரமான கேஸை எடுத்துக்கொண்டு வந்தார். ஸி. ஐ. டி. சிவசாமியும் மோகனும் இருந்த அறைக்குள் நுழைந்த அவர், ''சிவசாமி, ஒரு முக்கிய கேஸ் கொண்டு வந்திருக்கிறேன்'' என்று பீடிகை போட்டார்.

''கேஸை யெல்லாம் இங்கே ஏன் கொண்டு வருகிறீர்கள்? வக்கீலிடம் எடுத்துச் செல்லுங்கள்'' என்ருர் சிவசாமி.

''அட, நல்ல ஆளப்பா நீ! அப்புறம் பிரசவ கேஸா என்றுகூடக் கேட்பாய் போலிருக்கிறதே!''

''ஏதாவது கொலை வழக்கா?''

''பெரிய 'மர்டர் கேஸ்' ஒன்றுமில்லை. சாதாரண கேஸ்தான். ஆனுலும் என்னுல் கண்டுபிடிக்க முடியவில்லை. அதனுல்தான் இங்கே உன்னிடம் கொண்டு வந்திருக்கிறேன்'' என்ருர் சாரங்கபாணி.

''இதோ பாருங்கள், இன்ஸ்பெக்டர் சார்! நீங்கள் பாட்டுக்கு விவரத்தைச் சொல்லிக்கொண்டே போங்கள். நான் 'உம்' கொட்டிக்

கொண்டே வருவேன். அப்படி நான் 'உம்' கொட்டவில்லையானால் என்னை எழுப்புங்கள்!''

''உனக்குத் தூக்கம் வருவதற்காக நான் கதை சொல்ல வரவில்லை. நீ கேட்பதானால் கேள்: இல்லாவிட்டால் நான் எழுந்து போகிறேன்'' என்று கோபப்படுவது போல் காண்பித்துக்கொண்டார் சிவசாமி.

''நீங்கள் மட்டும் எழுந்து போய்விடுவீர்களோ? அப்படி என்றால், நீங்கள் எழுந்து போனதும் காபி வரவழைக்கிறேன்'' என்று சொல்லிச் சிரித்தான் சிவசாமி.

சாரங்கபாணி, ''அடடே, சும்மாச் சொன்னேன் அப்பா. நீ இப்பொழுதே காபியைத் தருவிக்கலாம். எனக்கு ஆக்ஷேபம் இல்லை!'' என்றார்.

சாரங்கபாணியை ஒரு 'காபி தாசர்' என்றுதான் சொல்ல வேண்டும். ஒரு தினத்துக்குக் குறைந்த பட்சம் நான்கு வேளைகளாவது, காபி சாப்பிடாவிட்டால் அவர் மண்டை வெடித்துவிடும்.

காபி வந்ததும் அதை மூவரும் அருந்தினர். காபி சாப்பிட்ட உற்சாகத்துடன் சாரங்கபாணி நன்றாக நிமிர்ந்துகொண்டு, வழக்கைச் சொல்ல ஆரம்பித்தார்.

''இது ஒரு காணாமற்போன கேஸ்.''

''கேஸே காணாமற் போய்விட்டதா?''

''சேசே, நீ ஒண்ணு. காணாமற் போன கேஸ் என்றால், ஒரு ஆள் காணவில்லை, அதைப் பற்றிய கேஸ் என்ற அர்த்தத்தில் சொன்னேன்.''

''சரி, காணாமற்போன கேஸாக வேண்டுமானால் இருக்கட்டும். எந்தக் கேஸ் ஆனாலும், அதை மோகனிடம் ஒப்படைத்துவிட்டு, நீங்கள் நிம்மதியாகப் போகலாம்'' என்றான் சிவசாமி.

சாரங்கபாணி கோபத்துடன், ''என்னப்பா நீ பேசறது? என்னாலேயே கண்டுபிடிக்க முடியாத கேஸ் என்கிறேன். நீ என்னடா என்றால் அதை அந்தச் சிறுவனிடம் ஒப்படைத்துவிட்டுப் போகச் சொல்கிறாயே?'' என்றார்.

''இருந்த இடத்திலேயே உட்கார்ந்துகொண்டிருந்தால், கேஸ் விவரம் தானாகக் கிடைக்குமா?'' என்று வினவினான் சிவசாமி.

''சரி, நீயே கண்டுபிடித்தாலும் சரி, அல்லது மோகனே துப்பறிந்தாலும் சரி-அதைப் பற்றி எனக்கு அக்கறை இல்லை. இதோ கேஸை நான் சொல்லிவிடுகிறேன்'' என்று தொடர்ந்தார்.

அவர் சொன்ன விவரங்கள் மோகனை அப்படியே திகைப்பில் ஆழ்த்தின.

''சென்னையிலிருந்து கொஞ்ச தூரத்தில் உள்ள சோமனூரில் வசிக்கும் சபேசன் என்பவருடைய பெண், லீலாவைக் காணவில்லையாம். அவர் பக்கத்து ஊருக்கு ஏதோ ஒரு திருமண வைபவத்துக்குச் சென்றிருந்தாராம். இந்தப் பெண் நிறைய நகைகள் அணிந்துகொண்டு, கல்யாண வீட்டு வாசலில் விளையாடிக்கொண்டிருந்தாளாம். அந்தக் கல்யாணச் சந்தடியில், இச் சிறுமியை யாரும் கவனிக்கவில்லை. வெகுநேரம் கழித்து லீலாவின் தாயார் அவளைத் தேடியபோதுதான், அப்பெண்ணைக் காணவில்லை என்று தெரிந்தது. உடனே ஊரெங்கும் தேடிப் பார்த்துவிட்டு, அப்பொழுதும் எவ்விதப் பயனும் இல்லாமற் போகவே, லீலாவின் தந்தை, சபேசன், போலீசில் 'ரிப்போர்ட்' கொடுத்திருக்கிறார். இந்தக் கேஸில் உடனே ஆகவேண்டியதைக் கவனிக்கவேண்டும் என்று நமக்கு உத்தரவு வந்திருக்கிறது.'' இவைதான் மிஸ்டர் சாரங்கபாணி கூறிய விவரங்கள்.

'லீலாவைக் காணவில்லை; யாரோ கள்வர்கள் தூக்கிச்சென்றுவிட்டார்கள்' என்ற விஷயத்தைக் கேள்விப்பட்டதும், மோகன் 'ஆ!' என்று அலறிவிட்டான். உடனே சாரங்கபாணி, 'ஏன் இப்படிக் கத்துகிறாய்? லீலாவை உனக்கு முன்பே தெரியுமா என்ன?'' என்று கேட்டார்.

மோகன் உதட்டைக் கடித்துக் கொண்டு, தன் அவசர புத்திக்

காகத் தன்னையே நொந்துகொண்டான். பிறகு சமாளித்துக் கொண்டு, ''இல்லை, இல்லை! எனக்கு அவள் யாரென்றே தெரியாதே.....இந்தச் சிறுமியைத் திருடர்கள் எதற்காகத் தூக்கிச் சென்றிருக்க வேண்டும்? என்றுதான் புரியவில்லை'' என்ருன்.

சாரங்கபாணி அசுவாரஸ்யமாகத் தலையை ஆட்டி, ''ஆ, இது மாதிரி எவ்வளவோ கேஸ்கள் எங்களுக்குத் தினமும் வந்தவண்ணம் இருக்கின்றன. பணக்கார வீட்டுக் குழந்தைகளைத் தூக்கிக் கொண்டுபோய்த் தங்கள் இருப்பிடத்தில் சிறை வைப்பது, பிறகு அவர்களுடைய வீட்டுக்கு 'தங்கள் குழந்தையைத் தாங்கள் திரும்பிப் பெற விரும்பினுல், இந்த மரப்பொந்தில் ரூ. 10,000 ஐ வைக்கவும்' என்று கடிதம் எழுதுவது - இதெல்லாம் இப்போது சகஜமாகி விட்டது. பணத்தைப் பறிக்கும் 'கலைஞர்கள்' கையாளும் வழி

களில் இதுவும் ஒன்றுயிற்றே!'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தார்.

மோகன் சிரிக்கவில்லே; சிந்தனேயில் ஆழ்ந்தான்.

பிறகு, ''நான் எப்படியாவது இந்தக் கேஸைக் கண்டுபிடித்து, லீலாவை மீட்டு, கயவர்களேச் சிறைக்கு அனுப்பி வைக்கிறேன்'' என்ருன். அவன் உடலில் படபடப்பு இருந்தது.

இப்பொழுது கள்வர்களின் கையில் சிக்கி எவ்வளவு கஷ்டப்படுகிருளோ என்று எண்ணியபோது மனம் கசிந்தது. சிவசாமியும் சாரங்கபாணியும் மோகனுக்கு இந்தக் கேஸைக் கண்டுபிடிக்க அநுமதி தந்துவிட்டனர்.

சாரங்கபாணி சிவசாமியிடம், ''இந்த 'லிட்டில் பாய்' அந்தப் பெரிய கேஸை எப்படிக் கண்டு பிடிப்பான்?'' என்று வியப்புடன்

அவன் ஏன் அவ்வளவு அவசரப் படுகிருன், என்று சாரங்கபாணிக்குப் புரியவே யில்லே. ஆனல், மோகனுக்கோ, தன் தோழி லீலா

வினவினர். ''எப்படியாவது கண்டு பிடிப்பான்'' என்ருன் சிவசாமி.

அதே நேரத்தில் திவான் பகதூர் வீட்டு வேலேயாள் முனியன்

அங்கே வெகு வேகமாக ஓடிவந்தான். அவனுக்கு மேலும் கீழும் மூச்சு வாங்கியது.

''என்ன விஷயம்?'' என்று சாரங்கபாணி கேட்டதும், முனியன், பங்களாவில் நடந்த விஷயங்களை விவரமாகக் கூறினன். உடனே சாரங்கபாணி, சிவசாமி, மோகன் ஆகிய மூவரும் இரண்டு கான்ஸ்டபிள்களையும் அழைத்துக் கொண்டு, திவான்பகதூர் வீட்டுக்குச் சென்றனர்.

தினகரத்தினம் இவர்களைப் பார்த்ததும், ''வாங்க, வாங்க'' என்று வரவேற்ருர். அவர் குரலில் சுரத்தே இல்லை.

சாரங்கபாணி கைத் தடியை ஆட்டியபடி, ''என்ன திவான் பகதூர்வாள், திருட்டு எப்படி நடந்தது, சொல்லுங்க'' என்ருர்.

தினகரத்தினம், ''ஐயோ, திருட்டு நடந்தபோது நான் பார்க்கலீங்களே. நான்தான் மூர்ச்சையாகிக் கிடந்தேனே!'' என்று பதறினர். சிவசாமி, ''உங்கள் 'ஸே'பில் அடைபட்டிருந்த ரூபாய் நோட்டுக்கெல்லாம் இன்றுதான் விடுதலை கிடைத்ததாக்கும்!'' என்ருன் கேலியாக.

டாக்டரிடமிருந்தும், திவான் பகதூரிடமிருந்தும், கொஞ்சம் கொஞ்சமாக, விஷயங்களைக் கேட்டறிந்து கொண்டார் சாரங்கபாணி. அப்போது சிவசாமி தரையில் கிடந்தச் சிகரெட் சாம்பலில் சிறிய அளவை டாக்டரிடம் கொடுத்து, அதைப் பரிசோதித்துப் பார்க்கச் சொன்னன்.

டாக்டர் உடனே அதைப் பரிசோதித்துவிட்டு, ''ஓ, இதில் ஒருவித மயக்க மருந்து கலந்திருக்கிறதே!'' என்ருர். உடனே சிவசாமி, ''இப்போது புரிகிறதா, மிஸ்டர் சாரங்கபாணி? நேரடியாக மயக்க மருந்தைத் திவான்பகதூருக்குக் கொடுக்க முடியாதே, என்று இந்தத் தந்திரம் செய்திருக்கிருன் அந்தத் திருடன். இதில் சிறிதளவு மூக்கில் பட்டாலும், மயக்கம் வந்துவிடும். திருடனுக்குத் தினகரத்தினத்தின் இடுப்பில் இருக்கும் சாவியை எடுக்க, இதுவே சரியான வழியாகப்பட்டிருக்கிறது. பிறகு என்ன? முனியன் கண்ணிலும் மண்ணைத் தூவிவிட்டு, அவன் சாமர்த்தியமாக ஓடி மறைந்திருக்கிருன்'' என்று விளக்கினன்.

சாரங்கபாணி, ''சரி, திவான் பகதூர்வாள், நீங்கள் முதலில் எவ்வளவு ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்கள் காணுமற் போயிருக்கின்றன என்று எங்களுக்கு எழுதிக்கொடுங்கள். மற்றவற்றை நான் கவனித்துக்கொள்கிறேன்'' என்ருர். தினகரத்தினம் அப்படியே செய்தார்.

அப்போது டாக்டர், ''இன்ஸ்பெக்டர் சார், இங்கே வந்து சுந்தரத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டு திருடியவன், அதேபோல் சுந்தரத்தின் வீட்டில் போய் இவர் பெயரைச் சொல்லிக் களவாடியிருக்கிருன் போலிருக்கிறது. இங்கே சபாபதி என்ற பெயரில் நடித்தக் கள்வனே, அங்கே முத்துவாக நடித்திருக்க வேண்டும். அல்லது அவனுடைய ஆட்களில் யாராவது ஒருவன் அதைச் செய்திருக்கலாம்'' என்று தம் சந்தேகத்தைத் தெரிவித்தார்.

''நீங்கள் ஒரு டாக்டராயில்லாமல் ஸி. ஐ. டி.யாக இருந்திருந்தால் எங்கள் இலாகாவுக்கு எவ்வளவோ நன்மைகள் ஏற்பட்டிருக்கும்'' என்ருன் சிவசாமி.

சாரங்கபாணி, ''சரி, அப்படியானல் இப்போது நாம் என்ன செய்யலாம்? மிஸ்டர் சுந்தரத்தின் வீட்டுக்குப் போவோமா?'' என்ருர்.

''எனக்கு ஆட்சேபம் இல்லை'' என்ருன் சிவசாமி.

உடனேயே அவர்கள் அனைவரும் சுந்தரத்தின் வீட்டைச் சோதனை செய்யப் புறப்பட்டனர். அவர்கள் வாயிற்படி இறங்கும்போது உள்ளேயிருந்து திவான்பகதூர், ''ஐயோ, என் நகையெல்லாம் போச்சே! என் பணமெல்லாம் போச்சே!'' என்று மீண்டும் அழ ஆரம்பித்தது கேட்டது.

சுந்தரத்தின் வீட்டையும் சோதனை செய்துவிட்டு, சுந்தரமும் சாம்புவும் சொன்னவற்றைக் குறித்துவைத்துக் கொண்டார் சாரங்கபாணி. (தொடரும்)

கதை: 'ஆர்வி'

கடற் புலி

சித்திரம்: ஸாமி

முரடர்களில் ஒருவன் படிக்கட்டில் நின்று வாயை ஒரு கையால் மறைத்துக்கொண்டு . . . .
ஹோ! ஹோ!
கப்பல் வீரர்கள் ஒவ்வொருவராக ஈட்டியை எடுத்துக்கொண்டு ஓடுகிறார்கள் .
படைவரிசையாக அணிவகுத்து நின்றதும் தலைவன் ஒரு பகுதியைப் பார்த்து . . . . .
படகுகளில் ஏறி வழக்கம் போல் வளைத்துக் கொள்ளுங்கள்!
தலைவன் உத்தரவுப்படியே மரக்கலத்திலிருந்து படகுகளை எடுத்துக்கடலில் போடுகிறார்கள். பிறகு ஆறு பேர் வீதம் அத்தனை படகுகளிலும் ஏறிக் கொண்டு ஈட்டிகளையே துடுப்புகளாகக் கொண்டு செல்கிறார்கள்.

(தொடரும்)

அதிர் வெடி

ப. ரா.

'டமார்' என்று எழுந்த அதிர் வேட்டின் சத்தம் கிராமத்தையே கிடுகிடுக்க வைத்தது. மாரியம்மன் கோவிலில் திருவிழா. வில்லுப்பாட்டுத் தொடங்குவதற்கான சமிக்ஞையாக எழுந்தது அந்த அதிர்வெடியின் ஓசை.

மறுபடி வாணக்குழாய்களில் வெடி மருந்தைப் போட்டுக் கெட்டிக்கும் வேலையில் முனைந்தான் ராமசாமி. பத்து வயதுச் சிறுவன் அவன். அநாதை. ஊராரின் தயவில் வளர்ந்து வருகிறான். இந்த வருஷம் அம்மன் திருவிழாவில் அதிர்வெடி இலாகா அவன் கையில் ஒப்புவிக்கப்பட்டிருந்தது. சர்வ ஜாக்கிரதையுடன் செய்ய வேண்டிய வேலை அது. சற்றுக் கவனக் குறைவாக இருந்து விட்டால் மருந்து எதிர்பாராத விதமாய்த் திடீரென வெடித்து உறுப்புக்களுக்கும் ஒருகால் உயிருக்குமே ஆபத்து உண்டாகிவிடக் கூடும்.

அரை மணி நேரத்திற்கு ஒன்றாகப் பகலெல்லாம் வெடியோசை கிளப்பிக்கொண்டே இருக்க வேண்டியது. இன்றும் திருவிழாவின் விசேஷ அம்சங்களுக்கு முன்பு பூசாரி சொல்லும்போது போட்ட ஸ்பெஷல் வெடி ஒவ்வொன்றுந்தான் ஊரைக் கிடுகிடுக்க வைத்தது ராமசாமிக்கு வாழ்க்கையே வெறுத்துப் போகச் செய்தன. "சே சே! என்ன வேலையடா இது! இவ்வளவு கிட்ட நின்றுகொண்டு வெடி மருந்துக்கு நெருப்பு வைக்கிறோம். இந்த ஓசையில் என் காது செவிடாகி விட்டால்? விபத்து ஏதாவது நேர்ந்து கைகால் ஊனமாகி விட்டால்?' என்று கவலைப்பட்டான் அவன். நியாயமான கவலைதான்! ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி என்ற மாதிரி, வேறு கதியற்ற சிறுவன் ராமசாமி எனக் கண்டுதானே அவனிடம் இந்தப் பணியை ஒப்படைத்திருந்தார்கள்?

வில்லுப் பாட்டு ஆரம்பித்துக் கொண்டிருந்தார்கள். கிராமத்தினர் எல்லோரும் திரள் திரளாக வந்துகொண்டிருப்பதை ராமசாமி கண்டான். கோவிலுக்கு வெளியேயிருந்த ஒரு சிறு கொட்டகைதானே அவனது ஸ்தானம்? போகிறவர்கள் அவனைத் தாண்டித்தான் செல்ல வேண்டும். பிரபல திருவிழாவாகையால் வெளியூர்களிலிருந்தும் ஏராளமான ஜனங்கள் வந்து சேர்ந்திருந்தனர். அனைவரும் நல்ல ஆடைகள் அணிந்து, அகத்தின் மகிழ்ச்சி முகத்தில் பொங்க வந்தார்கள். அவர்களது பைகளிலும் மடியிலும் காசு குலுங்கிற்று. பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தான் பையன். அவனுக்கு மட்டும் பையும் காலி; வயிறும் காலி!

பூசாரி வந்தார். "டேய் ராமசாமி! வில்லுப்பாட்டு முடியும் வரையில் வெடி கிளப்பாதே. ஓசை

இடைஞ்சலாக இருக்கும்'' என்று சொல்லிவிட்டுப் போனார். பையன் ஒரு பெருமூச்சுடன் எழுந்தான். குறைந்தது இன்னும் மூன்று மணி அவகாசத்திற்காவது நிம்மதியாக இருக்கலாம்!

முதலில் பசியைத் தீர்த்தாக வேண்டும். வழக்கமாக அவனுக்குச் சோறு போடுபவர்கள் கிராம முன்சிப் வீட்டினர். அவர்களில் ஒருவர் பாக்கியில்லாமல் வில்லுப் பாட்டுக் கேட்பதற்குக் கோயிலுக்கு வந்தாயிற்று. இந்த அநாதைச் சிறுவன் இன்னும் சாப்பிட வரவில்லையே என்று காத்துக்கொண்டிருப்பார்களா. என்ன?

அம்மன் சந்நிதியில் அலங்காரங்கள் செய்துகொண்டிருந்தார் பூசாரி. பக்தர் ஒருவர் காணிக்கையாக அளித்திருந்த ஜரிகையிழைத்த பட்டுச் சேலையைத் தேவிக்கு அணிவித்தார். இரும்புப் பெட்டியிலிருந்த ஆபரணங்களை ஒவ்வொன்ருய் எடுத்துச் சூட்டினுர். கனத்த மலர்மாலைகள் அந்த நகைகளை மூடி மறைத்துக் கொண்டு விடாதவாறு அவர் எடுத்துக்கொண்ட பிரயாசை மிக அதிகம். சுற்றிலும் எரிந்துகொண்டிருந்த நெய் விளக்குகளின் ஒளியில் ஜரிகையும் தங்கமும் போட்டியிட்டுக்கொண்டு 'டால்' வீசின.

பூசாரி மனம் பூரித்தார். 'நான் பணக்காரன்' என்று விளம்பரம் செய்து கொள்ளும் ஆவல் பொதுவாக எல்லோருக்குமே உள்ளது தானே. 'இந்த மாரியம்மன் பணக்காரி. இவளது பூசாரி நான்' என்று அவர் பெருமையுற்றுரோ, என்னவோ! வெளிப் பிராகாரத்தில் உட்கார்ந்து வில்லுப்பாட்டுக் கேட்டுக்கொண்டிருந்தனர் ஜனங்கள். அத்தனை பேர் கண்களும் தேவியின் அலங்காரத் தோற்றத்தின் மீதுதான் பதிந்திருந்தன.

''சாமி, வயிறு பசிக்குது. ஏதாச்சும் காசு குடுங்க'' என்றது ஒரு தீனக்குரல். திரும்பிப் பார்த்த பூசாரி, ராமசாமியின் வாடிய முகத்தைக் கண்டார். அவர் மடி நிறையக் காசு இருந்தது. ஆனுல் உள்ளந்தான் கனியவில்லை. இதில் கோபம் வேறு வந்துவிட்டது,

''உன்னை யாரடா வரச்சொன்னது இங்கே? தரித்திரப் பயலே, போ வெளியே!'' என்று சீறி விழுந்தார். பயந்த நாய் வாலைப் பின்னங்கால்களுக்கிடையே வைத்துக்கொண்டு நழுவுவது போல் வாய் திறவாமல் வெளியேறினுன் பையன். ''தரித்திரப் பயலே!'' என்ற அந்த வார்த்தைகள் அவன் நெஞ்சைத் துளைத்துவிட்டன.

பிராகாரத்தில் வில்லுப்பாட்டு வெகு சம்பிரமமாக நடந்துகொண்டிருந்தது. ஆனுல் அதன் இனிமை ராமசாமியின் காதில் புகவில்லை.

புஷ்பம், சந்தனம், ஊதுபத்திகள் இவற்றின் நறுமணம் எங்கும் கமழ்ந்தது. ஆனுல் அவனது நாசியில் ஏறவில்லை.

ஏன்?

வயிற்றைக் கலக்கும் பசியும் நெஞ்சைத் துளைக்கும் சுடுமொழிகளும் சேர்ந்து வேறு எந்த இன்பத்தையும் அவன் உணராதவாறு செய்தன.

வெளியே வந்தான். திருவிழாவுக்கென வந்து திறக்கப்பட்டிருந்த கணக்கற்ற மிட்டாய்க் கடைகளைக் கண்ணெடுத்துப் பார்க்கும் தகுதி கூட இல்லாமையால், ஏதோ சிந்தனை செய்தவாறே கால் போன திக்கில் நடந்தான்.

''தாயே மாரியாத்தா! நீ பட்டுச் சேலை கட்டியிருக்கிருய், தங்க. வைர நகைகள் பூண்டு ஜொலிக்கிருய். ஊரெல்லாம் உனக்குத் திருவிழாக் கொண்டாடுகிறது. ஆனுல் இந்த ஏழைக்கு ஒரு வாய் சோறு போடவில்லை. அதிலும் உன் பூசாரி.'' இப்படி எண்ணும் போதே அவன் கண்களில் நீர் நிரம்பிக் கன்னங்களிலும் வழிந்துவிட்டது.

அநாதைச் சிறுவன்! அவன் கண்ணீரைத் துடைக்க யார் இருந்தார்கள்?

நடந்து நடந்து ஊருக்கு வெளியே இருந்த பாழடைந்த ஹனுமார் கோவிலை அடைந்தான். நல்ல இருட்டு. அந்த இருளோடு இருளாக அக்கோவில் வாசலில் இரு உருவங்கள் அடங்கிய குரலில்

ஏதோ விவாதித்துக்கொண்டிருந்தன. ஒதுங்கி நின்ற ராமசாமியின் காதில் ஒவ்வொரு வார்த்தையும் தெளிவாக விழுந்தது,

* * *

"ஏண்டா பயப்படுகிறாய்? இவ்வளவுதானா உன் பேச்செல்லாம்? இதில் ஒரு ஆபத்துமில்லை. கப்சிப்பென்று வேலையை முடித்துவிடலாம். மாரியம்மன் கழுத்தில் இருக்கும் அந்த வைரமாலையே ரூபாய் ஐயாயிரம் பெறும் என்றால்...." என்று வற்புறுத்தும் குரலில் கூறிக்கொண்டிருந்தான் ஒரு மனிதன்.

"எல்லாமாகச் சேர்ந்து மொத்தம் பத்தாயிரத்திற்காவது வரும் என்று சொல்லு இல்லையா?"— இது மற்றவன்.

"நிச்சயமாக ஏன், பத்தாயிரத்துக்கு மேலேகூட வரும். என்ன கிடைத்தாலும் ஆளுக்குப் பாதி. அவ்வளவுதானே?"

"சரி, உன் திட்டம் என்னவென்று இன்னொரு முறை தெளிவாகச் சொல்லு. கேட்கிறேன்."

"இந்தா, கேட்டுக்கொள் - மாரியம்மன் கோவிலுக்கு நேர் எதிரே, அந்தத் தெருவின் கோடியில் ஒரு பெரிய வைக்கோற்போர் இருக்கிறது, பார்த்திருக்கிறாயா?"

"ஆமாம், இருக்கிறது,"

"அதற்கு இரண்டு பக்கமும் எல்லாம் கூரை வீடுகள். இந்த வைக்கோற் போருக்கு நெருப்பு வைத்து விட்டோமானால் போதும். ஊர் முழுவதும் தீப்பற்றிக்கொள்ள வசதி இருக்கிறது. எனவே வில்லுப்பாட்டை அப்படியே விட்டு விட்டு ஜனங்கள் வைக்கோற்போர் நெருப்பை அணைக்கக் கட்டாயமாய் ஓடி வருவார்கள். கோவிலில்

ஒருவர்: என்ன ஸார்! உங்கள் பையனுக்கு ஏதோ கலக்டர் உத்தியோகம் கிடைத்திருப்பதாகச் சொல்லுகிறுர்கள். அவனுக்குச் சம்பளம் 30 ரூபாய் என்கிறீர்கள். இது அதிசயமாக இருக்கிறதே.

மற்றவர்: ஆமாம் ஸார், என் பையன் ''இஷ்ட பூரணு'' ஹோட்டலில் பில் கலக்டராக வேலை பார்க்கிருன். அவனுக்குச் சம்பளம் 30 ரூபாய் என்ருல் இதில் என்ன அதிசயம்?

யாரும் மிகுந்திருக்க மாட்டார்கள். நெருப்பை வைத்துவிட்டு நாமே கூக்குரலையும் கிளப்பி விடலாம். பிறகு ஊரைச் சுற்றிக்கொண்டு போனல் இரண்டே நிமிஷங்களில் கோவிலுக்கு வந்து விடுகிறேம்..''

''அதென்ன அவ்வளவு நிச்சயமாய்ச் சொல்லுகிருய்? அங்கு யாரேனும் இரண்டொருவர் காவலாக நின்ருலோ?''

''போடா, பயந்தாங்கொள்ளி. அந்தக் காவற்காரர்கள் தலைமீது ஆளுக்கொன்று போட நமக்குத் தெரியாதா? அதற்கப்புறம் கண் இமைக்கும் நேரத்தில் மாரியம்மனின் நகைகளைக் கவர்ந்துகொண்டு மறைந்து விடலாம்.. உம், எழுந்திரு.''

மற்றவன் எழுந்தான், இரு உருவங்களும் கிராமத்தை நோக்கி நடந்தன. ராமசாமி படபடவென அடித்துக்கொள்ளும் இதயத்துடன் முன்னேறி ஹனுமார் கோவிலின் வெளிப் பிராகாரத்தில் அமர்ந்தான். இவர்கள் பக்காத் திருடர்கள், கோவிலையே கொள்ளையிடப் புறப்பட்டிருக்கிருர்கள் என்பது அவனுக்குத் தெளிவாயிற்று. அவன் மனது வைத்தால் குறுக்கு வழியில் ஒரே ஓட்டமாக அவர்களை முந்திக்கொண்டு கிராமத்தை அடைந்து விடலாம். பூசாரியிடம் விஷயத்தைச் சொல்லி எச்சரித்து இத் திருடர்களின் திட்டத்தைத் தகர்த்து, அவர்களையும் கையுங் களவுமாகப் பிடிக்கச் செய்துவிடலாம்!

'ஆனல் எதற்காக இத்தனை சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டும்? என் பசிக்குச் சோறு போடாத மாரியம்மனது நகைகள் பறிபோனல்தான் என்ன?'

'வேண்டும், நன்ருய் வேண்டும். அந்தப் பூசாரிக்குக் கூடப் புத்தி வரும்.'

கறுவிக்கொண்டே உட்கார்ந்திருந்த ராமசாமியின் கண்கள் சுழன்றன. தூக்கமா இது? என்னவென்று தெரியவில்லை. பிராகாரத் தூண்மீது அப்படியே சாய்ந்து விட்டான். அப்படி எத்தனை நேரம் இருந்தானே, அவனுக்கே தெரியாது. இடி முழக்கம் போன்ற ஒரு சப்தம் கேட்டதும் பதறிக்கொண்டு கண் விழித்தான்.

எதிரே ஆஜானுபாகுவாய்த் தோளில் கதாயுதத்தைச் சார்த்திக்கொண்டு நின்ற உருவம் சாக்ஷாத் ஹனுமானுடையது என்று கண்டுகொள்ள வெகு நேரமாகவில்லை அவனுக்கு. பயமும் பக்தியும் கலந்து மனத்தைக் கௌவ அவர் காலில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்தான்.

''குழந்தாய், ராமசாமி எழுந்திரு'' என அந்த உருவம் பணித்தது. கடுமையோடு அன்பும் கூடியிருந்தது அக் குரலில். பையன் எழுந்து மெய் விதிர்க்க நின்ருன். ஆஞ்சநேய பகவான் பேசினர்:

''நான் போற்றித் துதித்துத் தொண்டு செய்துவரும் தெய்வம்

ஸ்ரீராமபிரான். அவரது பெயரைத் தரித்திருக்கும் நீ இப்படிக் கடமையைப் புறக்கணித்து நிற்கலாமா?''

''ஐயனே, நான்....'' பதில் சொல்ல ஆரம்பித்த அவன் நாக் குழறிற்று. மகா வல்லமையுள்ளவராயினும் அன்பின் அவதாரமான வாயுபுத்திரன் ஒரு புன்னகையுடன் அவன் தோள்மீது கையை வைத்தார். ''குழந்தாய், உன் மனநிலை எனக்கு விளங்குகிறது. பசியின் கொடுமை உன்னை நேர் வழியில் சிந்திக்க முடியாதபடி செய்து விட்டது. இப்போது நீ கண்ட திருடர்கள் தேவாலய சொத்தையே அபகரிக்கத் துணிந்து விட்டார்கள். தெய்வத்தினிடம் அச்சம் இல்லாதவர்களுக்கு வேறு எத்தகைய பெரிய பழி பாவங்களும் ஒரு பொருட்டல்ல. அவர்களை அடக்க உதவுவது உன் கடமை. அதில் தவறி விட்டாய்.

''உன் பசி சிறிது நேரம் நீடிக்கும், உணவு கிடைத்ததும் தணிந்து விடும். ஆனால் கடமையில் தவறிய நீ உன் மனச்சாக்ஷியின் குத்தலினின்று ஒரு கணமேனும் தப்ப முடியுமா!''

ராமசாமியின் மீது அந்த மொழிகள் ஓர் மந்திர சக்தி போல வேலை செய்தன. ''பகவானே, என் தவற்றுக்கு மனப்பூர்வமாய் வருந்துகிறேன். இப்போதே ஓடிச் சென்று என்னாலானதைச் செய்கிறேன்....''

''போய் வா, குழந்தாய். ஸ்ரீராமசந்திரனின் அருளால் உனக்கு வெற்றி கிட்டுவதாக!'' என வாழ்த்தி விட்டு ஆஞ்சநேயர் மறைந்தார்.

ராமசாமி ஓடினான், அவனைப் பசி, தாகம், களைப்பு எதுவும் வருத்தவில்லை. அரை மைல் தூரத்தையும் இமைப் பொழுதில் கடந்து கோயிலை அடைந்தான்.

ஒரு நிமிஷம் பிந்தவில்லை! ஊர்க்கோடியில் நெருப்பு, ஆரவாரம். கும்பலெல்லாம் அங்கே தான். காவலாகக் கோயிலில் நின்ற பூசாரியைக் கம்பத்துடன் பிணைத்துக் கட்டிக்கொண்டிருந்தனர் திருடர்கள். அவர்களது கவனம் திரும்பியிருந்த ஒரு கணத்தில் கோவிலினுள்ளே நுழைந்து விட்ட ராமசாமி அம்மன் சந்நிதிக் கதவின் பின்னால் ஒளிந்து கொண்டான், அவன் கையில் ஆயுதமாக விளங்கிற்று தேய்காய் உடைக்கும் இரும்புப் பாளம்.

திருடர்கள் உள்ளே வந்தனர். அம்மனுடைய நகைகள் மீது அவர்கள் கைபடும்வரையில் பையன் காத்திருக்கவில்லை.

பொட்டென்று தலையில் அடி வாங்கிய ஒருவன் சுருண்டு விழுந்தான். மற்றவன் திரும்பிப் பார்க்கு முன்பு அவனுக்கும் ஒன்று விழுந்துவிட்டது.

தேவியின் நகைகளை அபகரிக்கத் துணிந்து வந்த இரு கயவர்களும் அவள் சந்நிதியிலேயே விழுந்து உதிரத்தைப் பெருக்கித் துடித்தனர்.

ராமசாமி போய்ப் பூசாரியின் கட்டுக்களை அவிழ்த்து அவரை விடுதலை செய்தான். இதற்குள் நெருப்பை உடனடியாக அணைத்துவிட்டு ஜனங்கள் ஏக அமளி துமளியுடன் கோவிலுக்குத் திரும்பி வருவது தெரிந்தது.

* ஃ *

'டமார்' எனக் கிளம்பிற்று இன்னோர் அதிர்வெடியின் ஓசை. இது ராமசாமி கிளப்பியதல்ல. அவனுக்கு மரியாதை செய்வது போல் பூசாரியே முன்னின்று கிளப்பியது.

அதைத் தொடர்ந்து 'ராமசாமிக்கு ஜே' என்ற கோஷமும் கிளம்பி வானைப் பிளந்தது. 'அநுமானுக்கு ஜே' என்று தன் மனத்திற்குள் எதிரொலி எழுப்பினான் அவன். தன் வீரச் செய்கையால் பல்லாயிரக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள கோவில் உடமைகளைக் காத்து இரு பக்காத் திருடர்களையும் பிடித்துக் கொடுத்த ராமசாமியைப் பூசாரியுட்பட ஊரார் தலை மீது தூக்கி வைத்துக் கொண்டாடியதில் வியப்பென்ன?

அன்றிலிருந்து 'அதிர்வெடி இலாகா' எப்போதுமே அவனிடம் தரப்படவில்லை. அவன் வயிறும் வாட வைக்கப்படவில்லை.

பனங்கிழங்கு

திருச்சி அண்ணு

பாத்திரங்கள்:

கணபதி, கார்த்திகேயன், கிட்டு, குப்பு, கேசவன், கோபாலன், சங்கர், சாரங்கன், சிங்காரம்.

[காலை நேரம். பிள்ளைகள் பம்பரம் விளையாடுகிறார்கள். குப்பு கூவிக்கொண்டு வருகிறான்.]

கு: (கூவியவண்ணம்) பனங்கிழங்கு! பனங்கிழங்கு!

கா: என்ன குப்பு, பனங்கிழங்கா?

கு: ஆமா, பனங்கிழங்கு தான்.

கி: இப்படிக் கொண்டா, தம்பி. தின்ன ருசியாக இருக்குமா?

கு: இது தின்பது இல்லை கிட்டு! இது ஒரு பத்திரிகை.

கா: அட, வெள்ளிமூக்குச் சிங்கமே, இந்தப் பனங் கிழங்கைச் சாப்பிடு!

[பிள்ளைகள் சிரிக்கிறார்கள்]

கு: பனங் கிழங்கு ஆண்டு மலர். சிங்கிள் காப்பி ரெண்டணு. பன்னிரண்டு நயா பைசா தான். அதிகவிலை இல்லை. ரொம்ப நயமாயிருக்கும்.

கா: அப்போ பனங்கிழங்கைக் கொடேன், பார்க்கலாம்.

கு: அட இரு பிரதர். ஓசியிலே படிக்கறதுக்கு இவ்வளவு அவசரமா?

கி: கொடு குப்பு, பிளீஸ்.

கு: சரி, இந்தாங்க பனங்கிழங்கு. சுவைச்சுப் பாருங்க.

கா: இது என்ன படம், அட்டைப் படம்? குரங்கு போட்டிருக்கே. பக்கத்திலே மனிதன் இருக்கான். எதைக் குறிக்குது அட்டைப் படம்?

கு: புரட்டு. உள்ளே அட்டைப் பட விளக்கம் இருக்குமே. படி!

கா: (படிக்கிறான்) 'மனிதன் மறைந்தான் மன்மதக் குரங்கிலே; மன்மதக் குரங்கு மனிதனுள் மறைந்தது.'

கி: இது என்ன பாட்டு? ஒண்ணுமே புரியலையே.

கா: (வாசிக்கிறான்) அட்டையை இரு உருவங்கள் அலங்கரிக்கின்றன. ஒன்று குரங்கு, மற்றொன்று மனிதன். குரங்கிலிருந்து வந்தவன் மனிதன் என்று ஆராய்ச்சி நிபுணர்கள் அறைகின்றனர். இந்தக் கண்ணோடு பாருங்கள்! மனிதனும் குரங்கும் ஒன்றுதான் என்பது தெரிகிறதா?

கி: தெரியலையே.

கு, நீ என்னப்பா, புரியலை, தெரியலைன்னு சொல்லிக்கிட்டே வர்றியே. கண்ணை நல்லாத் துடைச்சுக்கிட்டுப் பாரு.

கி: எந்தக் கண்ணாலே பாக்கறது?

கு: ஆராய்ச்சிக் கண்ணோடு!

கி: அப்படி ஒரு கண் இல்லையே, பிரதர்.

கு: அப்படியானால் பட விளக்கத்தைப் படிக்கச் சொல்லு.

கா: மனிதனும் குரங்கும் ஒன்று என்பது ஒரு தத்துவம். இதை விளக்குகிறது நமது அட்டைப் படம்.

முதலில் கண்ணை மூடுங்கள். குனியுங்கள். நன்றாகக் குனியுங்கள். உங்கள் மூக்கினால், குரங்கைத் தொடுங்கள். அப்படியே கண்ணைத் திறந்து பாருங்கள். என்ன தெரிகிறது? குரங்கு மட்டுமே தெரிகிறது, அல்லவா? மனிதன் மறைந்துவிட்டான். எங்கே? மன்மதக் குரங்கிலே!

கி: இப்படிக் கொடு, கார்த்திகேயா. குரங்கை மூக்காலே தொட்டுப் பாக்கறேன்..அடேடே ஆமப்பா, மனிதனைக் காணலையே. குரங்கு மட்டும்தான் தெரியுது.

கா (வாசிக்கிறான்) இப்போது மனிதனைப் பிடியுங்கள். மூக்கினால் தொட்டுப் பாருங்கள். பார்த்தால், குரங்கைக் காணோம். எங்கே போயிற்று மன்மதக் குரங்கு? மனிதனுள் மறைந்தது!

கி: இப்படிக் கொடு, கார்த்திகேயா. மனிதனையும் மூக்காலே தொட்டுப் பார்க்கறேன்..அடடே குரங்கு மறைஞ்சுட்டுதே!

கு :எப்படி அட்டைப் படம்?

கி: எப்படியா? பனங்கிழங்கு ஆசிரியர் மட்டும், கையிலே அகப்பட்டா, முதுகிலே ஒண்ணு வச்சு, சபாஷ் போடலாம். அவர் இல்லாத இந்தச் சமயத்திலே பனங்கிழங்கு நிரந்தர வாசகனாகிய உன் முதுகிலே கையை வைக்க வேண்டியதுதான் நியாயம்.

கா: மூக்குக்கு வேலை கொடுத்த அந்த ஆசிரியரை. மூக்குள்ள வரை நாம் மறக்கவே முடியாது.

கு: சரி, மேலே படி கார்த்திகேயா?

கா: பனங்கிழங்கு, விசேஷ மலர். அணா இரண்டு. பன்னிரெண்டு நயா பைசா. பனங்கிழங்கு உள்ளடக்கம்.

ஆசிரியர் உரை. கோடை வெயில் - கவிதை. கல்லும் பொழியாதோ கதை. துண்டு துணுக்கு - விகடப் பேச்சு. பொறுக்காத கிளிஞ்சல் - மூத்தோர் வாக்கு. தாத்தாவும் நானும் - கதை, மணிபர்ஸ் எழுதியது. கண்ணுன கண்ணன் - படப் போட்டிப் பரிசு, மூக்குக் கண்ணுடி - விவாதம்.

கி: அடேயப்பா, இவ்வளவு விஷயம் இருக்கா இதுக்குள்ளே?

கு: உனக்கு ஒண்ணுமே தெரியாது. இனிமேலாவது பனங்கிழங்கு படி. சொந்தமா வாங்கிப் படி! . . கார்த்திகேயா, நேரமாகுது பார். சொச்சத்தையும் படியேன். பையன் வந்திடப் போருன்.

கி: எந்தப் பையன்?

கு: பத்திரிகைக்காரன்!

கி: வந்தா என்ன? இது உன் பத்திரிகைதானே?

கு: ஆமா ஆமா! அது சரி, கவிதையைப் படியேன், கார்த்தி.

கா: வெயில்! வெயில்! வெயில்!
ஆகா! ஆகா!
பொய்யில் துன்பம் ஓகோ!
கொடுமைப் பரீட்சையின்
கோரப்பல் படைத்தவனே,
விசிறியின் பகைவனே நீ
வியர்வையின் அரசனே!
நின் வரவு
பொல்லாங்கு; பொல்லாங்கு
வெயிலே நீ
கொடியவன்; கொடியவன்;
நடந்திடு; இங்கு நீ
நில்லாதே வெயிலே!

கு: எப்படி கிட்டு, கவிதை?

கி: சொல்லத் தெரியலேயே. ஆகா! துண்டு துணுக்கு வரட்டுமே கார்த்திகேயா!

கா: கோபால், நீதான் டாக்டர்; சங்கர், நீதான் நோயாளி! படியுங்க!

ச: டாக்டர் ஸார், என்னைத் தெரியுதா? போன வருஷம் இதே நாளிலே உங்களைப் பார்க்க வந்தேனே.

கோ: சரி.

ச: அப்போ எனக்கு ஜல தோஷம். மருந்து கொடுத்திங்க.

கோ: சரி.

ச: குணமாகிடுமின்னிங்க. பணம் கூட வாங்கிட்டீங்க.

கோ: சரி.

ச: அந்த ஜலதோஷம், இப்பவும் அப்படியே இருக்கு, டாக்டர்; மருந்து கொடுங்க.

கி: சபாஷ். நல்லா வந்தானய்யா வைத்தியம் பார்க்க. . அதிருக்கட்டும், எதோ கதை இருந்திச்சே.

கு: ஆமா. கல்லும் பொழியாதோ கதை! சாரங்கா, நீ படியேன் கதையை.

சா: (படிக்கிருன்) அந்த ரஸ்தாவின் ஒரத்திலே ஒரு கற்குவியல். அந்தக் குவியலிலே நான் இருந்தேன். என்னைப் பார்த்தான் ஒரு பையன். பார்க்கப் பார்க்க, அவன் உடம்பிலே ஒரு கிளுகிளுப்பு. இனம் புரியாத உற்சாகம். கையில் எடுத்தான் என்னை. எறிந்தான் வான வீதியிலே. நான் பறந்து சென்றேன். உயர உயரப் பறந்தேன்; பரவசமடைந்தேன். கீழே கிடந்த கற்குவியலைப் பார்த்துச் சொன்னேன். "நான் உங்களைவிட உயர்ந்தவன். நீங்கள் என்னைவிடத் தாழ்ந்தவர்கள்" என்று கூறியபடி பறந்தேன். டணார்! உடைந்தது கண்ணுடி! அந்த வீட்டு ஜன்னல் கதவிலே பதிந்திருந்த கண்ணுடி, நான் மோதியதால், உடைந்தது.

'என்னைப் போல் பலசாலி யாரும் இல்லை. என்னைத் தடுப்பவர் தூள் தூளாகிப் போவார்!' என்று கூறிக் கொண்டே, வீட்டுக்குள் பாய்ந்தேன். உள்ளே ஒரு கட்டில். அங்கே விரித்திருந்தது ஒரு பட்டு மெத்தை. நான் அந்தப் பட்டு மெத்தையிலே விழுந்தேன்.

'என் போன்றவருக்கு இந்த இடமே பொருத்தமான இடம்!' என்று எண்ணமிட்டு மகிழ்ந்தேன்.

அதே சமயம்; வீட்டுக்காரன் உள்ளே வந்தான். பட்டு மெத்தையிலே கிடந்த என்னைப் பார்த்தான். கோபம் வந்து அவனுக்கு.

''கல்லுக்குப் பட்டு மெத்தை கேட்கிறதா? இதை யார் எடுத்து இங்கே போட்டது?'' என்று உறுமினான். எரிச்சலோடு என்னை வெளியே வீசி எறிந்தான்.



நான் கீழே இறங்கி வந்தேன். அவமானமாக இருந்தது. வீதியிலே கிடந்த கற் குவியலை நெருங்கினேன். கல கலவென்று சிரித்தன மற்றக் கற்கள் எல்லாம்.

நான் உயர்ந்து விட்டேன் என்று கர்வம் கொண்டேன். சிறிது நேரத்திலே தாழ வந்தேன். வாழ்வில் உயர்வும் தாழ்வும் சகஜம். அதனால் கர்வ மடையாதீர்!

கி: சபாஷ். நல்ல கதை.

கு: அதிருக்கட்டும் கிட்டு, பொறுக்கிய கிளிஞ்சலைப் படிக்கச் சொல்லு.

கா: (படிக்கிறான்) பொறுக்காத கிளிஞ்சல்—மூத்தோர் மொழி. பெரியவர்கள் அநேக இடங்களில், சொல்லாத வார்த்தைகள், பனங்கிழங்கிலே இடம் பெறுகின்றன.

பனங்கிழங்கு பிடிக்காதவருக்குப்
பனங்கற்கண்டு பிடிக்கவா
போகிறது?
உலகம் என்பது பச்சோந்தி;
உவகை ஊட்டும் வானவில்!
கஷ்டம் என்பது வேப்பங்காய்!
சாக்கை தின்பது வேப்பங்காய்!
தங்கக் குவளை யானால் என்ன?
மண் குவளை யானால் என்ன?
உள்ளிருக்கும் சுத்தமே பிரதானம்.
பாலும் பனங்கிழங்கும் ஒன்
றாகுமா?
பரீட்சை என்றால், பசியும்
வருமோ?

கி: அடேயப்பா! பிரமாதமா இருக்கு, பொறுக்காத கிளிஞ்சல்!

கு: அதிருக்கட்டும். ''தாத்தாவும் நானும் - மணிபர்ஸ் பேசுகிறது'' அதைப் படி.

கி: அவசியம் கேட்க வேண்டும்! சிங்காரம்தான் மணிபர்ஸ்; பேசு மணிபர்ஸ்!

சி: நான் மணிபர்ஸ். என்னை எல்லாருக்கும் தெரியும். என்னைப் போலத்தான் தாத்தாவும்!

என்னைப் பாருங்கள். தாத்தாவின் வாயைப் பாருங்கள்! ஒற்றுமை தெரியவில்லையா? பாலுவைக் கேளுங்கள்; அவன் சொல்வான். தாத்தாவுக்கு மணிபர்ஸ் வாய் என்பான். காசை எண்ணிச் சொல்வது மணிபர்ஸ்! கதைகள் எண்ணிச் சொல்வது தாத்தா! மணிபர்ஸ் பணக் களஞ்சியம்! தாத்தா கதைக் களஞ்சியம்! பாலுவைக் கேளுங்கள். அவன் சொல்வான் அப்படித்தான் என்று. தாத்தாவிடம் எத்தனை கதைகள் கேட்டிருப்பான். அவனுக்குத் தெரியாததா? ஐஸ் புரூட் வாங்க, பர்ஸைத் திறந்து எத்தனை காசு எடுத்திருக்கிறான்!

மணிபர்ஸ் பல ரகம். தாத்தாக்கள் பல ரகம். கதை சொல்லும் தாத்தா; பாட்டுப் பாடும் தாத்தா;

ஆட்டமாடும் தாத்தா - இதேபோல் எத்தனையோ மணிபர்ஸ்.

'நானும் - தாத்தாவும்' எங்களுக்குள் எவ்வளவு ஒற்றுமை பாருங்கள். இதை விளக்கி, பனங்கிழங்கு ஆசிரியருக்கு அனுப்பினேன். அவரும் ஒற்றுமையாய் இருந்து வெளியிட்டார். உங்கள் காதோடு சொல்லி வைக்கிறேன். ஒற்றுமையாய் இருங்கள்!

கி: சபாஷ்..மணிபர்ஸ்!

கா: கிட்டு, சில விளம்பரங்களைக் கேள்.

கி: விளம்பரமா?

கு: அட, இது தெரியாத பிள்ளையா நீ? விளம்பரம் இல்லாத பத்திரிகை உண்டா? தலையில்லாத மனிதன் உண்டா? விளம்பரமே தலை, இது விளம்பர யுகம்.

கா: பிரதர் குப்பு, நீங்க விளம்பரத்தை எல்லாம் படியுங்களேன்.

கு: [படிக்கிறான்] கருங்கல் மார்க் பல்பொடி! அன்பர்களே, இயற்கை நாட்டியம் ஆடுகிறது! இளங்கொடிகள் ஆடுகின்றன! மரங்கள் ஆடுகின்றன! மனிதன் ஆடுகின்றான்! உங்கள் பல் ஆடுகிறதா? ஆட்டமில்லாதுபோனால் அழகு இல்லை, ஆட்டத்துக்கு உத்தரவாதமுள்ளது எங்கள் கருங்கல் மார்க் பல்பொடி! பழைய கற்சுவர்களைப் புரட்டித் தட்டிப் பார்த்து, முறையோடு தயாரிக்கப் பட்டது, எங்கள் கருங்கல் மார்க். இன்றே வாங்குங்கள்; ஒரு முறை உபயோகித்துப் பாருங்கள். அதன் மகிமை உணர்வீர்கள்!

கி: கிட்டு, எங்க தாத்தாவுக்கு ஒரு டப்பி வாங்கிக் கொடுத்துப் பார்க்கலாமா?

கு: [படிக்கிறான்] உங்களுக்குக் கிட்டிப்புள் வேண்டுமா? பல சைசுகளில் கிடைக்கும் உறுதியுள்ள கிட்டிப்புள். ஒரே தடவையில் ஒரு டஜன் கிட்டிப்புள் வாங்குவோருக்கு ஒரு கிட்டி இனமாக வழங்குகிறோம். இன்றே ஆர்டருக்கு முந்துங்கள்.

கா: என்ன, கிட்டுவுக்குக் கிட்டிப்புள் வேணுமா?

கி: வேணும்; முதலிலே இனமா வழங்கறதை வாங்கிட்டு, பாக்கியை அப்புறம் வாங்கலாம்.

கு: [படிக்கிறான்] 'வர வா அம்புலிமானே, வா' என்று குழந்தை அம்புலியை அழைக்கிறது விளையாட; ஆனால் அம்புலியை, சந்திரனை வைத்து விளையாட முடியுமா? வேண்டுமானால், எங்கள் கோலிக் குண்டுகளை வைத்து விளையாடலாம். உங்களுக்குக் கோலிக் குண்டுகள் வேண்டுமா? கண்ணாடிக் கோலிகள்! மண் கோலிகள்! ரப்பர் கோலிகள்! பிளாஸ்டிக் கோலிகள்! தேவைக்கு எழுதுங்கள். விலாசம், கோலி அண்டு கோலி, கோலி மேக்கர்ஸ், முக்குழிபுரம், பேந்தா-3.

அநேக இடங்களில் எமது கோலிகளை வைத்து விளையாடி வெற்றிமாலை சூடியவரும், 'கோலியாட்டக் கோபுரம்' என்று பட்டம் வாங்கியவருமான கோபு அவர்கள், கூறுவதைக் கேளுங்கள்:

சோ: நான் வெகுகாலமாக உங்கள் கம்பெனி கோலிகளையே உபயோகித்து வருகிறேன். அநேக இடங்களில் உங்கள் கோலிகளைக் கொண்டு விளையாடியே வெற்றியடைந்திருக்கிறேன். வெற்றிக்கு வழிகாட்டி, உங்கள் கோலிகளே.. தயவு செய்து, அடுத்த தபாலில் 100 கோலிகளை அனுப்புங்கள்.

கா: என்ன கிட்டு. கோலிக்கு ஆர்டர் பண்ணலாம்னு பாக்கறியா?

கி: இந்த விளையாட்டு இருக்கட்டும்; பேப்பர்காரன் வரதுக்குள்ளே பனங்கிழங்கை ஒரு புரட்டு புரட்டணும். பாரு; இன்னும் என்ன இருக்கு..?

கா: உனக்குத் தகுந்த நாடகம் இருக்கு..

கி: என்ன நாடகம்?..

கா: அடி முட்டாள்!

கி: சரி, அப்புறம் படிக்கலாம். நிதானமாக நீ படிக்க வேண்டிய விஷயம். இந்த அவசரத்திலே, ஒண்ணுமே புரியாது. பனங்கிழங்கைப் புரட்டு; மூளைக்கு வேலை கொடு!

கா: அந்த வேலை உனக்கு ரொம்ப அவசியம். பாவம், ரொம்பப் பலவீனமா இருக்கு உன் மூளை!

கி: இருக்கட்டும், உன் பரிகாசம்! போட்டிப் பந்தயம் இருந்தா, அதை மட்டும் படி..

கா: (படிக்கிறன்) எங்கள் படப் போட்டி, ஒரு விசேஷ அம்சம்! அடுத்த பக்கத்துப் படங்களைப் பாருங்கள். எல்லாம் காதுகள் தான்! கடல் சூழ்ந்த இப்பூவுலகின் கண், நடமாடும் உயிரினங்களின் காதுகள்தான் படமாகத் தீட்டப் பட்டுள்ளன. இந்தக் காதுகளை நன்ருகக் கவனியுங்கள். முதல் படம், கழுதையின் காதைக் குறிக்கிறது; ஆகவே முதல் படம் கழுதை! இதேபோல், மற்றக் காதுகளையும் கண்டு பிடித்து எழுதுங்கள்! சரியான விடையைப், பனங்கிழங்கு ஆசிரியர் காதிலே போட்டு, வாயை சீல் வைத்திருக்கிறோம். எங்கள் சீல் வைத்த விடைக்குச் சரியான விடை அனுப்பியவருக்கு, பனங்கிழங்கு பைண்டு வால்யூம் பரிசாக அளிக்கப்படும்! ஒன்றுக்கு மேற்பட்டவர் இருந்தால், பைண்டு வால்யூம் பங்கிட்டுத் தரப்படும். இப்போட்டி சம்பந்தமாக, ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

கி: எல்லாம் சரி; கடைசியிலே ஆசிரியர் தீர்ப்பே முடிவானதுன்னு எழுதியிருக்கே.

கு: ஆமா, அப்படித்தான் எழுதியிருக்கு..

கி: ஆசிரியர் சொல்றது தான் சரி, அப்படி இல்லேன்னு நாம வாயைத் திறக்க முடியாது, இல்லையா?

கு: ஆமா, ஆசிரியர் தீர்ப்பே முடிவானது..

கி: அவர் காது சரியில்லேன்ன, நம்ம காதைத் திருகிடுவாங்க, இல்லையா?

(சிரிப்பு-கணபதி வருகை)

க: (கூவியவண்ணம்) பனங்கிழங்கு, சார் பனங்கிழங்கு! (குப்புவிடம்) சார் எடுங்க, சார் பணத்தை! சில்லறை தராமெ, பனங்கிழங்கைப் படிக்கிறீங்களே, இது நியாயமா?

கி: இனிமே படிக்க முடியாது: எல்லாம் படிச்சு முடிச்சாச்சு!

க: உங்க பணத்தை எடு, சார்!

கு: சில்லறை வாங்கிட்டு வரச் சொன்னேனே, இருக்கா சில்லறை?

க: எவ்வளவுக்குச் சில்லறை வேணும்?

கு: நூறு ரூபா நோட்டுக்கு..

க: என்ன சார், விளையாடறீங்களா? ரெண்டணுக் கிழங்கு, இதை வாங்க நூறு ரூபா நோட்டா?

கு: எங்கிட்டே அதான் இருக்கு.

க: சரி எடுங்க, சில்லறை தரேன்..

கு: (பாசாங்கு) அடாடா, மறந்திட்டேனே..நோட்டு வீட்டிலே இருக்கு..

கி: என்ன குப்பு, பனங்கிழங்கு வாங்கினதாச் சொன்னியே, நல்லா இருக்கு உன் வேலே! நீயும் ஓசிப் பேர்வழிதானு? நிரந்தர வாசகன், சொந்தப் புஸ்தகம்னு ஆர்ப்பாட்டம் பண்ணிட்டியே!

க: என்ன சார், விளையாட்டு? ஓசியிலே படிக்க வந்த மூஞ்சியைப் பாரு! கொண்டா சார், பனங்கிழங்கை!

கு: நான் மட்டுமில்லேப்பா.. இதோ இவரும்தான் படிச்சார்.

கி: நான் மட்டுமில்லே! தம்பி! இதோ, இவரும் ஓசிப் பேர்வழி தான்..

க: இப்படி எத்தனை பேர் கிளம்பியிருக்கீங்க?

கி: நாங்க மூணுபேர்தான்!

க: நல்ல தோசிப் பயலுக, வந்து சேர்ந்தானய்யா! ஓசியிலே படிச்சு உருப்படலாமின்னு பாக்கற பயலுக!

கி: சொல்றதைச் சொல்லு, உன் வாயாலே நாங்க கேட்க வேண்டிய வேளை!

க: அட போ, சார்! படா பேச்சாளி..பனங்கிழங்கு, சார்.. பணங்கிழங்கு!..ரெண்டணு சார்! பன்னிரெண்டு நயா பைசா! பனங்கிழங்கு விசேஷ மலர்!..பன்னிரெண்டு நயா பைசா!

(திரை)

வருங்கால வீரர்

எஸ். சேதுராம கிருஷ்ணன்

அந்தப் படம் இப்பொழுது தான் திரையிடப்படுகிறது. கூட்டம் நிறைய இருக்குமென்று தெரிந்துதான் இரவு ஒன்பதரை மணிக் காட்சிக்கு, ஏழரை மணிக்கே தியேட்டரில் க்யூவில் நின்றுவிட்டேன்.

இன்னும் இரண்டு மணிநேரப் பொழுதை எப்படிப் போக்குவது என்பதுதான் தெரியவில்லை. பொழுது போக்கிற்காக நான் கொண்டுவந்திருந்த ஒரு தமிழ்ப் பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்தேன். எனக்குப் பின்னுல் சுமார் பத்துப் பேர்கள் நின்றுகொண்டிருந்தனர். சிறிது நேரம் கழிந்தது.

''டைம் என்ன ஸார்?'' என்ருர் எனக்குப் பின்னுலிருந்த ஒருவர்.

''எட்டு அடிக்கப் பத்து நிமிஷம்'' என்று கைக்கடிகாரத்தைப் பார்த்துவிட்டுப் பதிலளித்தேன்.

'இன்னும் ஒன்றரை மணி நேரத்துக்கு மேலேயே இருக்கிறதே! எப்படிக் கழிப்பது?' என்று அவர் சிந்தனை செய்துகொண்டிருந்தாற் போல் தோன்றியது. அவர் தம்

முடைய இரு கைகளையும் பின்னுல் கட்டிக்கொண்டு நின்ற காட்சி.

சொல்ல மறந்துவிட்டேனே! நான் நின்றது பதினைந்தணு க்யூவில். எனக்கு அடுத்த சம தூரத்தில் பத்து அணு க்யூ. அதற்குச் சிறிது தள்ளி ஏழரை அணு க்யூ. வலதுகைப் பக்கம் சமதூரத்தில் ஒருரூபாய் நான்கணு க்யூ வரிசை.

"என்ன புஸ்தகம் ஸார்?" என்றார் பக்கத்திலுள்ள அந்த நண்பர்.

"வருங்கால வீரர்களாக இப்பொழுதுள்ள வாலிபர்கள் திகழ வேண்டும். அதற்கு எப்படி எப்படி இருக்கவேண்டும் என்று ஓர் அறிஞர் இந்தப் பத்திரிகையில் எழுதி யிருக்கிறார். அதைப் படித்துக்கொண் டிருக்கிறேன்" என்று பதிலளித்தேன் நான்.

பின் பக்கம் திரும்பிப் பார்த்



தேன். ஒரே நீளமான க்யூ. பத்து அணாவிலும் அப்படியே. திடீரென்று கூட்டத்தில் சிறிது பரபரப்பு ஏற்பட்டது. ஒரு ரூபாய் நான்கணா க்யூவிலிருந்து எங்கள் க்யூவில் தடதட என்று ஒரு ஐந்து ஆறு பேர் குதித்தனர். எனக்கு முன்னாலும் இரண்டு பேர் குதித்தனர். எனக்குக் கோபம் வந்தது.

"க்யூ வரிசையில் நின்றால் சரியாக நடக்கணும். பொறுப்புணர்ச்சி வேணும். இந்த மாதிரி நடப்பது ரொம்பத் தப்பு!" என்றேன் அவர்களிடம்.

அவர்கள் என்னை முறைத்துப் பார்த்ததைப் பார்த்ததும் எனக்கு அங்கேயே அப்படியே சமாதி கட்டி விடுவார்களோ என நினைத்தேன். என்னிடம் பேசாமலேயே அவர்கள் முன்பக்கம் திரும்பிக் கொண்டனர். நானும் பேச்சை வளர்த்தாமல் விட்டு விட்டேன்.

பிறகு என் பக்கத்திலுள்ள நண்பர், "இவர்கள்தான் வருங்கால வீரர்கள்! அந்த அறிஞர் சொல்லிய வருங்கால வீரர்கள்!" என்று கிண்டலாகத்தான் சொன்னார். முன்னால் குதித்தவர்களில் ஒருவனை எனக்குத் தெரியும். காலேஜில் படித்துக்கொண் டிருக்கிறான். நான் ஆபீஸுக்குச் செல்லும் பொழுதுதான் அவனும் சைக்கிளில் செல்வான். 'படித்தவர்களே இப்படிச் செய்தால் மற்றக் கல்வியறிவில்லாத மக்களைப் பற்றிக் கேட்பானேன்? அவர்கள் இதற்குமேல்தான் நடந்து கொள்வார்கள்!' என்று சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

பக்கத்திலுள்ள நண்பர் ரொம்பவும் தழு தழுத்த குரலில் சொன்னார்.

"நமது தேசம் ரொம்ப மோசமாகப் போய்விட்டது. க்யூவில் கூட ஒழுங்காக நிற்பதற்குப் பழகிக் கொள்ளவில்லை நம் மக்கள். சினிமா டிக்கட்கூட கறுப்பு மார்க்கெட்டில் விற்கின்றனர். இவைகளையெல்லாம் நினைத்துப் பார்த்தால்..!" என்று நிறுத்தினார்.

அவரை இப்பொழுதுதான் நன்றாகக் கவனித்தேன், இருபத்து மூன்று வயதிருக்கும். சாதாரணமான உடை அணிந்திருந்தார். நன்கு படித்தவர் என்பது அவரது பேச்சிலேயே வெளிப்பட்டது.

"பொய்யும் புரட்டும் மிகவும் அதிகமாகப் போய்விட்டது இப்பொழுது, பொய் சொல்வதை ஒரு கலையாக எண்ண ஆரம்பித்து விட்டனர்!" என்றேன் அவரிடம்.

"பொய் சொல்வதை ஒரு கலையாக எழுதவே கூட ஆரம்பித்து விட்டார்கள்!" என்றார் அவர்.

உண்மையெனப் பட்டது எனக்கு, மணியைப் பார்த்தேன். ஒன்பது அடித்துப் பதினைந்து நிமி

ஷம். இன்னும் கால்மணி நேரத்தில் டிக்கெட் கொடுக்க ஆரம்பித்து விடுவார்களென்றதும் சிறிது தெம்பு வந்தது. 'எங்கள் க்யூவிலிருந்து பத்து அணு க்யூவிற்கு ஒரு அரை டஜன் பேர் குதித்தனர். என்ன நாகரிகமற்ற செய்கை!' என்று எண்ணிக்கொண்டேன். ஆனல் வெளியே சொல்லவில்லை.

''இந்த வாலிபர்கள் வருங்காலத்தில் கோழைகளாகத்தான் இருப்பார்கள், ஒவ்வொருவரும் சத்தியம், தன்னம்பிக்கை, எந்த விஷயத்திலும் ஒரு கட்டுப்பாடு முதலியவைகளைக் கைக்கொண்டால்தான் வீரர்களாகத் திகழ முடியும்'' என்று சிறிது உரத்த குரலிலேயே சொன்னர் அந்த நண்பர்.

அவருடைய பேச்சில் ஒரு சக்தி, கவர்ச்சி இருக்கத்தான் செய்தது. 'இவரைப்போல வாலிபர்கள்தான் நமக்குத் தேவை' என்று நினைத்துக்கொண்டேன். எனக்கு முன்னுலிருந்த அந்தக் காலேஜ் மாணவன் கூட இவருடைய பேச்சைக் கேட்டுக்கொண் டிருந்தான். ''உண்மை; இப்படி நாங்கள் செய்திருக்கக் கூடாது!'' என்ருன் அவன். 'உண்மையாகத்தான் அவன் சொன்னுனு? அல்லது கேலி செய்தானு?' என்பதை என்னுல் தெரிந்துகொள்ள முடியவில்லை.

க்யூ நகரவாரம்பித்தது. எனது நண்பர் திடீரென்று, ''இது எத்தனை அணு க்யூ ஸார்?'' என்று கேட்டார்! எனக்குத் திடுக்கிட்டு விட்டது! என்ன, ஏதாவது விளையாடுகிருரா?

''பதினைந்தணு க்யூ'' என்றேன் எனது பதற்றத்தை வெளிக்காட்டாமல்.

''ஐயையோ! நான் பத்து அணு க்யூன்னு நினைத்துவிட்டேன். உங்களிடம் ஐந்து அணு இருக்கா ஸார்? நான் நாளைக்கு உங்களைத் தேடிக் கொண்டு வந்து தந்துவிடுகிறேன்'' என்ருர் அவர்.

நான் உண்மையிலேயே ஆச்சரியப்பட்டு விட்டேன். 'பதினைந்தணு க்யூ இது என்று எனக்குத் தெரியாதே!' என்று சொல்லியதை என்னுல் நம்ப முடியவில்லை. எங்களுக்கு முன்னுல் கொட்டை எழுத்துக்களில் ''டிக்கட் ரூ 0-15-0'' என்று போட்டிருப்பது அவருடைய பார்வையினின்றும் தப்பியிருக்க முடியாது. மேலும் எத்தனையோ தடவை இந்தத் தியேட்டருக்கு வந்திருப்பார் அவர். என்னிடம் அப்பொழுது ஐந்து ரூபாய் இருந்தது, ஆனுலும் ஐந்து அணு அவருக்குக் கொடுக்க எனக்கு விருப்பமில்லை.

''அடாடா! இல்லையே ஸார்! ஒரு ரூபாய்தான் கொண்டு வந்திருக்கேன். டிக்கட்டுக்குப் பதினைந்தணு போக மீதி ஓர் அணுத்தானிருக்கும்'' என்று ஒரு பொய்யைச் சொல்லி வைத்தேன். 'பொய் சொல்வதை ஒரு கலையாக எண்ண ஆரம்பித்து விட்டனர்' என்று நான்தான் சிறிது நேரத்துக்கு முன் அவரிடம் சொன்னேன். இப்பொழுது உண்மையைச் சொன்னுல் ஐந்து அணுவை நான் இழக்கவேண்டுமே! திருப்பித் தருவார் என்று நான் நம்பவில்லை.

சிறிது நேரம் பேசாமல் நின்றுகொண்டிருந்தார் அவர். உடனே திண்டில் ஏறி, பத்து அணு 'க்யூ' வில் குதித்துவிட்டார்!

'இவ்வளவு நேரம் எவ்வளவோ பிரசங்கங்கள் செய்தாரே! வாலிபர்களெல்லாம் வருங்கால வீரர்களாகத் திகழவேண்டுமென்று கர்ஜனை செய்தார். ஆனுல் இவர் நடந்து கொண்டது..?' என்று எண்ணிக்கொண்டே டிக்கட் வாங்கி 'ஆடிட்டோரி'யத்திற்குள் நுழைந்தேன்.

''எல்லா வாலிபர்களும் இவரைப்போலவே 'வருங்கால வீரர்'களாகத் திகழ்ந்துவிட்டால்!..'' இதற்குமேல் என்னுல் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

இப்பொழுதும் நான் சினிமாவிற்கு க்யூவில் நிற்கும்பொழுதெல்லாம் அந்த 'வருங்கால வீரர்' என் மனக்கண்முன் தோற்றமளிக்கத் தவறுவதில்லை.

விடுமுறை இதழ்

தம்பி

தலையங்கம்

ஊரில் எத்தனையோ இருக்க இது என்ன ஒரு புதுப் பத்திரிகை என்று மலைக்க வேண்டாம். விடுமுறையில் என் நண்பர்களுக்கும் உறவினருக்கும் கடிதங்கள் எழுதி எழுதி அலுத்துப்போய்விட்டேன். எல்லாக் கடிதத்திலும் கிட்டத்தட்ட ஒரே மாதிரி எழுதவேண்டியிருக்கிறது. அதைவிட ஒரு கடிதத்திற்கே பல பிரதிகள் எடுத்து அனுப்பிவிட்டால் என்ன என்று தோன்றியது. அப்படிச் செய்யும்போது அதற்கு ஒரு கவர்ச்சியான உருவம் கொடுக்கவே இந்தப் பத்திரிகை தோன்றியது.

சென்ற வாரச் செய்திகள்

சென்ற வாரம் நமது வீட்டில் குறிப்பிடத் தக்க செய்தி ஒன்றும் நிகழவில்லை. உடல் சரியில்லாத தாத்தாவுக்கு இப்போது கொஞ்சம் குணம். ஆனால் இந்த வெயிலை அவரால் பொறுக்க முடியவில்லை. சென்ற வாரத்தில் குறிப்பிடத் தக்க செய்தி இல்லாவிட்டாலும் அடுத்த வாரத்தில் குறிப்பிடத் தக்க நிகழ்ச்சி ஒன்று இருப்பதை லேசாக நினைவூட்டுகிறேன். அடுத்த வியாழக்கிழமை என் பிறந்தநாள் என்பது உங்களுக்கு முன்னே நினைவிருக்கும்...

பிரயாணக் கட்டுரை

எத்தனையோ முறை நான் அலுத்துக்கொண்டிருக்கிறேன். ஊரெல்லாம் சுற்றவேண்டும் என்று எனக்கு உள்ள ஆசை இன்னும் நிறைவேறவில்லை. ஆனால் சமீபத்தில் நான் எழுதிய ஒரு கதை (கதை என்பதாக நான் எழுதிய ஒன்று) முதலில் சென்னைப் பத்திரிகாலயம் எல்லாவற்றையும் ஒரு முறை சுற்றிப் பார்த்து விட்டது. பிறகு திருச்சி, கோவை, மதுரை எல்லா இடத்துக்கும் போய் வந்தது. இப்போது கடல் கடந்து இலங்கையிலுள்ள ஒரு பத்திரிகைக்கு அதை அனுப்பி விட்டேன். அங்கிருந்தும் திரும்பினால் பம்பாய், கல்கத்தா, டில்லி போன்ற வடநாட்டுப் பகுதிகளுக்கு அதை அனுப்ப யோசனை.

குழந்தைப் பகுதி

நம் வீட்டு அருமைக் குழந்தை உஷா நாளொரு பொம்மையும் பொழுதொரு சட்டையும் பாழாக்கி குஷாலாக வளர்ந்து வருகிறாள். அவள் வாயில் பல்லாயிரம் ரக ஒலி வடிவங்கள் தோன்றுகின்றன. ஆனால் அடியேனுக்கு எதுவும் அர்த்தமாகவில்லை.

வார பலன்

இது மாதத்தின் முதல் வாரமாயிருப்பதால் பலனைப்பற்றி நான் அதிகம் சொல்லவேண்டாம். சாதாரணமாக இருப்பதுதான் வழக்கம். இந்த வாரக் கடைசியில் திருப்பதி வரை ஒரு பிரயாணம் இருக்கும் போலும் தோன்றுகிறது.

நற்செய்தி

கணக்குப் பரீட்சையில் நான் 90 மார்க்கு வாங்கியிருப்பதாக உத்தியோக பூர்வமற்ற ஒரு செய்தி கூறுகிறது. இது உண்மையாயிருக்கும் என்றும் மற்றப் பாடங்களிலும் இதுபோல் மார்க்கு கிடைக்குமென்றும் நம்புகிறேன்.

விளம்பரம்

இந்தப் பரீட்சையில் பாஸானதும் எனக்கு ஒரு நல்ல சைக்கிள்



''நம்ம ஜோசியர், நான் ஆறுமாதத்துக்குள்ளே செத்துப் போய்விடுவேன்னு சொல்லி ரெண்டு வருஷத்துக்கு மேலே ஆச்சு''

''ஆமாம் சார்....அவர் சுத்த மோசம்....நம்பவே கூடாது....இப்படியே எல்லோரையும் ஏமாத்திண்டு வறார்.''

—சிவராம்.

வாங்கிக் கொடுப்பதாக என் அப்பா சொல்லியிருக்கிறார். ஆகவே தயவுசெய்து நண்பர்களே, உங்களுக்குத் தெரிந்த சைக்கிள் கடைக்காரர்களை என் வீட்டுக்கு அனுப்புங்கள். நன்றி.

சினிமாப் பகுதி

சென்ற வாரம் நான் பார்க்கப் போனதெல்லாம் ஒரே ஓர் இங்கிலீஷ் சினிமாவுக்குத்தான். அதைப்போல் சிறந்ததாகச் சமீபத்தில் ஒன்றும் வந்ததில்லை. உயர்ந்த கதை. தலைசிறந்த நடிப்பு. மேலான காட்சி ஜோடனைகள் - இதையெல்லாம் பத்திரிகையிலிருந்தும் நண்பர்களிடமிருந்தும் நான் தெரிந்துகொண்டேன். ஏனென்றால் அன்று எனக்குத்தான் டிக்கெட்டுக் கிடைக்கவில்லையே.

சங்கீதம்

தங்கை கீதாவின் சங்கீதத்தில் அபிவிருத்தி காணப்படுகிறது. இன்று முதல் அவள் பாட்டு வகுப்புக்குச் சம்பளம் மூன்று ரூபாயிலிருந்து ஐந்து ரூபாயாக்கப்பட்டிருக்கிறது. இப்போது அம்மாவுக்கும் அக்கறை பிறந்துவிட்டது. அவளைத் தினம் சாயங்காலம் அரை மணி நேரமாவது சாதகம் பண்ணும்படி நச்சரிக்கிறாள். அநேகமாகக் கீதா இந்தத் தண்டனைக்குத் தப்புவதில்லை.

புத்தகப் பகுதி

பாடப் புத்தகங்களை விட்டுவிட்டுச் சமீப காலத்தில் நான் படித்த பிற புத்தகங்கள் அதிகம். ஒரு மாதத்தில் இத்தனை புத்தகம் படிக்க முடிகிறதா என்று எனக்கே வியப்பாக இருக்கிறது. தயவு செய்து உங்களிடம் ஏதாவது நல்ல புத்தகம் இருந்தால் எனக்கு அனுப்பவும். படித்துவிட்டுப் பத்திரமாக வைத்துக் கொள்கிறேன். மன்னிக்கவும்; கட்டாயம் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

சென்ற வாரத் தபால் அதிகமில்லை. எனது கட்டுரைகள்கூட பத்திரிகைகளிலிருந்து திரும்பி வரவில்லை. (அவையெல்லாம்தான், ஒன்று தவிர, முன்னமேயே வந்துவிட்டனவே!)

வந்த கடிதங்களில் முக்கியமானவை இரண்டு. காஞ்சியிலிருந்து சாரதி எழுதியது. அவன் காஞ்சி கருடசேவையைப் போட்டோ எடுத்து நெகடிவ்வை அனுப்பியிருந்தான். அதைக் கழுவி பிரிண்ட் போட்டுப் பார்த்தால் அதில் கருடனையே காணோம். வெறும் ஆகாசம்தான் இருந்தது.

இரண்டாவது கடிதம். . வாசலில் யார், தபால்காரரா?

கடைசித் தந்தி

சற்று முன் எனக்குக் கிடைத்த கடிதங்களின்படி நான் யாருக்காக இந்தப் பத்திரிகையைத் தயாரிக்கிறேனோ அந்த நண்பர்களும் உறவினர்களும் அடுத்த வாரம் சென்னைக்கு வருவதாக அறிகிறேன். அவர்கள் வரவு நல்வரவு ஆகுக.

16. ஏப்ரல், 1

சமயத்தை எதிர்பார்த்திருந்த 511 குபீரென்று இன்ஸ்பெக்டர்மீது பாய்ந்தான். ''ஆர்டர்! நான் உங்களை அரெஸ்ட் செய்கிறேன்'' என்று கூறியவாறே விலங்குகளை அவருடைய கையில் மாட்டியும்விட்டான்!

திமிறினார் இன்ஸ்பெக்டர். அறை வாங்கிய கான்ஸ்டபிள், 511க்கு உதவி புரியவே, அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

இந்தச் சமயம் 511 வேறொரு காரியம் செய்தான். இன்ஸ்பெக்டரிடம் இருந்தது போன்ற பெட்டியொன்றைத் தன் பையிலிருந்து எடுத்து அதன் மூலம் எந்த இடத்திற்கோ தகவல் கொடுக்க ஆரம்பித்தான். இன்ஸ்பெக்டர் பற்களை நற நற வென்று கடித்தார்.

எதிர்ப்பார்த்ததுபோல் தேரிழந்தூர் ஸ்டேஷனில் ஒரு போலீஸ் வண்டி நின்றுகொண் டிருந்தது.

பொன்னுரங்கத்தைக் கைது செய்யும்போது இரவு மணி பத்து.

இந்தியன் ஸ்டாண்டர்ட் டைம் 12 மணி அடித்ததும் திருச்சி ஜில்லாவில் பல பேரிடையே ரகசியமான பரபரப்பு ஏற்பட்டது. சென்னையிலிருந்த போலீஸ் கமிஷனரோ பின்னங் கைகளைக் கட்டியவாறே உலாவிக்கொண் டிருந்தார் தம் வீட்டு மாடியில்!

மாத்யூஸுக்குக் கடினமான வேலை, இரண்டு நாளாக. சுரேஷுக்கு அளித்திருந்தப் போலீஸ் பயிற்சியும் சரியான விதத்திலேயே உதவியது! அவனும் முக்கியமான விஷயங்களில் மாத்யூஸுக்கு உதவி செய்துகொண் டிருந்தான்.

ரகசிய அதிகாரிகள் தங்களுக்குக் கிடைத்திருந்த உத்தரவுகளைச் சரி பார்த்துக்கொண் டிருந்தனர். இன்னும் சிலர் தளவாடங்களை ஒழுங்குபடுத்தி, மருந்துடன் 'லோட்' செய்துகொண் டிருந்தனர்.

போலீஸ் ஏற்பாடுகளைப்பற்றித் தகவல் கிடைக்கத் தவறிவிட்ட 'பறங்கியன் தோப்பி'னரோ முழு ஆயத்தமும் செய்துகொண் டிருந்தனர் தங்கள் வேட்டைக்கு.

வொயிட் ரோஸ் கார்டன்ஸ் பேர்வழிகள் கொள்ளையை ஒரு உபதொழிலாகத்தான் கொண்டிருந்தனர். அவர்களுடைய முக்கியத் தொழில் வேறு ஒன்று எனத் தெரிந்ததும் அதைக் கண்டுபிடிக்க வேண்டியது தற்போது அவசியமாயிற்று.

நேரம் மிகவும் வேகமாகச் சென்றுகொண்டிருப்பது போலிருந்தது! பல பலவென்று பொழுது விடியும்போது மணி ஆறு. நடக்கப் போகும் சம்பவம் ஒன்றையும் அறியாமல் - அறிய அவசியம் இல்லாமல் நகர மாந்தர்கள் வழக்கம் போல் தங்கள் அலுவல்களில் ஈடுபட்டிருந்தனர். டி. எஸ். பி.யும், சுரேஷும் கலெக்டரிடம் விடை

பெற்றுக்கொண்டு காலை ஏழு மணிக்கெல்லாம் தங்கள் அலுவலகத்திற்குச் சென்று விட்டனர். ஆபத்துக்களைச் சமாளிப்பது பற்றியும், உத்தரவுகளை அனுப்புவது பற்றியும் மாத்யூஸ் சுரேஷுக்குக் கடைசி முறையாக விளக்கிக் கொண் டிருந்தார். ''உன் உயிரே போவதாயிருந்தாலும் சரி, எதிரிகளைக் கண்டு சலசலப்பு அடையக் கூடாது. நெல்ஸனைப்பற்றி நீ கேள்விப்பட் டிருக்கலாம். டிரபால்கர் முனையில் ஐரோப்பிய வீரன் நெபோலியனை முறியடித்த அவனுக்கு, கடைசிவரை அதைரியம் என்றால் என்னவென்றே தெரியாது'' என்றார்.

தற்போது, பெரும்பண்ணையூரிலிருந்து மற்றொரு திடுக்கிடும் செய்தி வந்தது! ஆம்; முன்பு சென்றிருந்த ஆயுதப் படை போதவில்லை என்றும், குழப்பம் எரிமலைபோல் திடீர்த் திடீரென்று கிளம்புவதாயும், மேலே என்ன செய்வதென்று கேட்டும் உதவி ஸூபரின்டென்ட் தகவல் அனுப்பியிருந்தார். ஜில்லா மாஜிஸ்டிரேடுக்கு அவசர அவசரமாகத் தகவல் அனுப்பினார் டி.எஸ்.பி. சற்று நேரத்தில் மாஜிஸ்டிரேட் நிலைமையை நேரில் பார்ப்பதற்காகச் சென்றுவிட்டார்.

நடுப்பகல் ஒரு மணிக்கு சுரேஷும், அவனது உதவியாளர் ஒருவரும் புறப்பட்டுவிட்டனர். பாங்க் ஏஜெண்டை மட்டும் ரகசியமாகச் சந்தித்து அவர்கள் யாரென்பதை மட்டும் தெரிவித்து, முக்கியமான விஷயமாய் அங்கே வந்திருப்பதாயும், தாங்கள் வந்திருப்பது வேறு யாருக்கும் தெரியக் கூடாதென்றும் அறிவித்தனர்.

அவர்களை அறிந்துகொண்ட பாங்க் ஏஜெண்டும் மேல் மாடியில் பாதுகாப்பான அறை ஒன்றிற்கு அழைத்துச் சென்றார். வழக்கம்போல் பாங்க் சந்தடி நிறைந்திருந்தது.

ஆ! மாயவரத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட இன்ஸ்பெக்டர் பொன்னுரங்கம் இங்கே எப்படி வந்தார்? அவரேதான்: சந்தேகமே இல்லை. காஷியரின் 'கௌண்ட'ருக்கு எதிர்ப்புறமுள்ள பெஞ்சில் அமர்ந்துகொண்டு ஏதோ கிறுக்கிக் கொண்டிருந்தார் ஒரு தாளில்!

சுரேஷ், தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். மணி இரண்டு - பத்து. விறு விறுவென்று தன் தலை வழியாக மாட்டியிருந்த 'ஹெட்போனை'ச் சரியாக வைத்துக்கொண்டான். அவன் கையில் ஒரு மைக்ரோபோன். ஆம். சுரேஷ் ஒரு வயர்லெஸ் ஆபரேடர்! அவன் எதிரே மேஜையில் ஒரு பெரிய பெட்டி! பல 'பாட்டரி'களைக் கொண்டிருந்த அதன் முன்பு பல்புகள் பளிச்சிட்டுக் கொண்டிருந்தன. சுரேஷ் அவற்றைத் தயார் நிலையில் வைத்துக் கொண்டான்.

அவனுடைய உதவியாளர் கண்களில் 'பைனுகுலரை' அணிந்து கொண்டிருந்தார். அவரது காதிலும் 'ஹெட்போன்' ஒன்று.

அறையின் கதவருகில்....

முழு ஆயுதமும் தரித்த ராணுவ வீரர்கள் இருவர் நின்று 'பாரா' கொடுத்துக்கொண் டிருந்தனர்!

மணி இரண்டு - இருபது.

இன்னும் அந்தக் காரைக் காணோமே? XYZ 1450 வரவில்லையா? என்ன வேடிக்கையாயிருக்கிறது!

சுரேஷ் 'ஸ்டெடி'யானான். தூரத்தில் ஹார்மோனிகல் ராகத்தில் கம்பீரமான, எலெக்டிரிக் ஹாரன் சப்தம் கேட்டது. இதோ வந்து விட்டதே! ஆம்..பள பளக்கும் கறுப்பு நிறக் கார் வந்தே விட்டது.

ஆனால்...

அதன் நம்பர் XYZ 817 என்றல்லவா இருக்கிறது? கார் வாசலைத் தாண்டி உள்ளே நுழைந்தது! அதிலிருந்து இறங்கியவர்களும் சந்தேகிக்கத் தகுந்தவர்கள் அல்லவே! உடல் ஊதி, நடக்கக் கூடத் திணறும் 'சேட்'டுக்கள் அல்லவா? கண்ணிமைக்கும் நேரம். பொன்னுரங்கம் சுறுசுறுப்பானார். எங்கிருந்தோ ஓடி வந்த சில பிச்சைக்காரச் சிறுவர்கள் காரின் நம்பர்த் தகட்டை நெருங்கினார்கள்.

பொன்னுரங்கம் எழுந்து விட்டார். யாரோ ஒருவன் அவரை நோக்கி விரைந்தான். ஒரு கணம் தான்! அவரது கையில் 'பௌண்

டன் பேனா'க்கள் அடங்கிய பெட்டி தற்சமயம் இருந்தது. பெட்டியைத் திறந்தார் அவர். ஒவ்வொரு பேனாவின் மூடியையும் கழற்றி அதை அதன் அடியில் செருகியவாறே பெட்டியுடன் ஓடுகிறார் அவர்?

அட பைத்தியக்கார மனுஷரே!

ஆம்..மூலைக்கொன்றாக அந்தப் பேனாவை பாங்கின் தரையில் அல்லவா வைத்துவிட்டு ஓடுகிறார்.

மறுகணம்.

திடீரென்று குழப்பம் எழுந்தது 'பாங்கி'ல்! ''டுமீல்!''

காஷியர் சுடப்பட்டு விட்டார். முன்னெச்சரிக்கைகளும் பொய்த்து விட்டன! ரத்த வெள்ளத்தில் கிடந்தார் காஷியர்.

''பிடி, விடாதே!'' என்ற சப்தம்.

''சேட்டுக்கள் எங்கே?'' என்ற கூச்சல். சுரேஷின் வாய் தகவல் கொடுக்க ஆரம்பித்துவிட்டது. கறுப்பு நிறக் காரைக் காணோமே?

''பூம்'' என்று அலறிக்கொண்டு போலீஸ் லாரிகள் ஓடின.

''பணம், பணம் போய் விட்டதே! இரண்டு லக்ஷரூபாய்!'' என்ற பாங்கி உத்தியோகஸ்தர்களின் ஓலம்.

''முன்னேறிக்கொண் டிருங்கள். டயரை நோக்கிச் சுடுங்கள்.''

''ஒரு கூட்டம் பாங்கில் பிடிபட்டு விட்டது. முக்கியமானவர்கள் தப்பி விட்டனர். உதவிப் படைகளுக்கு உத்தரவு கொடுங்கள்.''

* * *

தம் அலுவலகத்தில் 'வயர்லஸ் போனா'டன் அமர்ந்திருந்த டி.எஸ்.பி. வியர்வை வெள்ளத்தில் மிதந்துகொண் டிருந்தார். அவரது உதடுகள் சரமாரியாக உத்தரவுகளை அளிப்பதும், செவிகள் தகவல்களை வாங்கிக்கொள்வதுமாய் இருந்தன.

''என்னது, சுட்டும் பயன் இல்லையா? விடாதீர்கள் விரட்டிக் கொண்டே இருங்கள்!''

XYZ 817 - ஐத் தொடர்ந்து கொண்டிருந்த போலீஸார் அதன் டயர்களை நோக்கிச் சுட்டனர். ஆனால் அதனால் பாதிக்கப் பட

பேரன்: உடம்பெல்லாம் அரிக்கிறதே! என்ன தாத்தா பண்றது?

தாத்தா: முதல்லே என் முதுகைக் கொஞ்சம் சொறிஞ்சி விடு. அப்புறமா சொல்றேன்.

வில்லையே அந்தக் கார்! மேலும் பறந்து கொண்டுதானே இருந்தது!

''டுமீல்!''

போலீஸ் லாரி நின்றுவிட்டது. அதன் டயர்கள் வெடித்துவிட்டன!

''கவசம் தரித்த வண்டியை வேகப்படுத்துங்கள்.''

''சரி, எதிர்ப்புறத்திலும் வண்டிகள் வருகின்றன. தொடருங்கள். நிச்சயம் பிடிபட்டாக வேண்டும்.''

''என்னது, ஸ்ரீரங்கம் ஸ்டேஷனில் கலகமா? லைட்மெஷின் கன்னரை உபயோகியுங்கள். ரெஜிமெண்ட் நெம்பர் 210 பைர் ஆர்டர்.''

''ஆர்தர் ஸ்மித்தின்மேல் கண் வையுங்கள். தற்போது ஒன்றும் செய்ய வேண்டாம்''

''ஜீயபுரம் வட்டாரத்தில் காவிரியில் உஷாராக இருங்கள். மோட்டார்ப் படகுகள் தயாராகட்டும்.''

* * *

XYZ 817க்கும், கவசம் தரித்த வண்டிக்கும் இடையே இரண்டு பர்லாங் தூரம் இருப்பதாயும்,

இரண்டும் முழு வேகத்துடன் செல்வதாயும் தகவல் கிடைத்தது.

ஆஹ்..ஹா!

எதிரே மூடப்பட்ட லெவல் கிராஸிங்!!!

அதன் மறுபுறம்..? போலீஸ் லாரிகள் வந்துகொண்டிருந்தன கன வேகத்துடன்.

தூரத்தே ரெயில் என்ஜின் ஒன்று 'குபு குபு' வென்று வந்துகொண்டிருந்தது! பிடிபட வேண்டியது தானா? XYZ 817 திடீரென்று நின்று விட்டது. பின்னால் போலீஸ் வண்டி நெருங்கி விட்டது.

ஆனால் XYZ 817 குபீரென்று ஆகாயத்தில் தாவியது. ஆம்.... ஆகாயத்தில் பறக்கவே தொடங்கி விட்டது.

ஆம்..அது ஒரு ப்ளேன்-கார்;

* * *

ஸ்ரீரங்கம் போலீஸ் ஸ்டேஷனைக் கொளுத்த முயன்ற முயற்சி தடுக்கப் பட்டது சரியான சமயத்தில்.

பெரும்பண்ணையூரில் மாஜிஸ்டிரேட் உத்தரவு அளித்ததும் குழப்பத்தின் வேகம் தணிந்து விட்டது.

வொயிட் ரோஸ் கார்டன்ஸ் பங்களாவில்....? ஹெட்போனுடன் நாற்காலியில் அமர்ந்துகொண்டிருந்த ஆர்தர்ஸ்மித்தின் முகத்தில் கலவரத்திலும் மகிழ்ச்சிக் களையொன்று தென்பட்டது.

டி.எஸ்.பி.கலங்கவில்லை சிறிதும், கிடைத்த தகவலின் விளைவாக.

''மதிப்பிற்குரிய கமிஷனர், விமானப்படைக்குத் தகவல் கொடுங்கள். XYZ 817 வடகிழக்குத் திசையை நோக்கிப் பறக்கிறது தொண்ணூறு மைல் வேகத்தில்.''

சில விநாடிகளில்..

''கிர்'' ரென்று சப்தத்துடன் சென்னை விமானப் படைப் பிரிவின் பன்னிரண்டு விமானங்களும் ஆகாயத்தில் பறந்துகொண்டிருந்தன! கடும் சண்டை..பெரும் மோதல்.. செவ்வானத்தை வென்றுவிட்டது, சண்டையில் பெருக்கெடுத்துப் பூமியில் கொட்டப்பட்டச் செந்நீர்;

எங்கும்..எதிரிகள் தற்கொலை செய்து கொள்வதைத் தடுக்க முடியவில்லை. தீப்பற்றி எரிந்து கொண்டே கீழே விழுந்துகொண்டிருந்தது ப்ளேன்-கார்.

ஆர்தர்ஸ்மித்தின் முகம் வெளிறிப்போய்விட்டது.

திடீரென்று தாவினார் எதிரே இருந்த 'ஸ்விட்ச் போர்டை' நோக்கி. மறுகணம்—

'மடே' ரெனக் கீழே சாய்ந்தது அவர் நாற்காலி. தலை குப்புற விழுந்தார் ஆர்தர்ஸ்மித்.

* * *

நான்கு மணிப் போராட்டத்துக்குப் பின் போலீஸாருக்கு வெற்றி. ஆம்..ஏராளமான உயிர்ச் சேதங்களுக்கிடையே பிரம்மாண்டமான வெற்றி. கொள்ளைக் கூட்டத்தில் முக்கியமானவர்கள் XYZ 817 உடன் தங்களுக்கும் முடிவு தேடிக்கொண்டு விட்டனர். களவாடப்பட்ட பணம் முழுவதும் எரிக்கப்பட்டுவிட்டது! பிடித்தும் பயனில்லை.

ஆனாலும் போலீஸாருக்குப் பெரும் வெற்றியே!

இனி பறங்கியன் தோப்புச் சுரங்கத்தைத் திறந்தாகவேண்டும். அங்கே சுரேஷுடன் பின்சென்றனர் பெரும் என்ஜினீயர்கள்.. என்ன முயன்றும் பாதையைத் திறக்க முடியவில்லை. சுரேஷ் அவர்கள் உபயோகித்த 'டார்ச் லைட்'டை விவரித்தான்.

ஒரு எஞ்ஜினீர் துள்ளிக் குதித்தார், ''மாக்னெடிக் இன்டென்ஸிடி!'' என்று. பிறகு என்ன? பல முறை ஆராய்ந்து விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட காந்தக்கருவியின் மூலம் அந்தப் பாதையைத் திறந்து விட்டனர் அவர்கள்.

அங்கே..?

எதிரிகளைப் பற்றிய விஷயங்கள் அவ்வளவும் இருந்தன! ஆம்.. அந்நிய நாட்டு ஒற்றர்களின் கும்பல் அது என்பது தெள்ளத் தெளிவாகப் புரிந்தது. ஆம். நாட்டில் வேறு மூலையில் உள்ள மற்ற இரு கும்பல்களுடன் அவர்களுக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது! தற்போதே சுதந்தரம் அடைந்த இளையபாரதத்தை மறுபடியும் அந்நியர் வசப்படுத்த அந்

நியரால் நியமிக்கப்பட்ட ஏஜெண்டுகள் அவர்கள். "உன் துப்பாக்கியைக் கொண்டு உன்னையே சுடுவது" என்பதுபோல் இந்திய நாட்டுப் பணத்தைக் கொண்டு அந்நாட்டையே கவிழ்க்க முயன்ற வெளிநாட்டினர் அவர்கள்!

விஷயம் தெரிவிக்கப்பட்டதும் மறு பிளேனில் அங்கே வந்துவிட்டார் போலீஸ் கமிஷனர்.

சுரேஷுக்கு நாட்டின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் பாராட்டுக்கள் வந்து குவிந்தவண்ண மிருந்தன! நாட்டைக் காத்த நல்லதொரு குடிமகனென வருணித்திருந்தார் பாரதப் பிரதம மந்திரி.

அதிகாரிகளின் கூட்டம் ஒன்று சுரேஷையும், சேகரையும் பாராட்டும் பொருட்டு நடந்தது.

இந்தப் பொன்னுரங்கம்தான், ஜிம்மியைத் துடிதுடிக்கச் செய்ததுடன் துப்பாக்கிக் குண்டால் சுட்டு வீழ்த்தியவர்!

இந்தப் பொன்னுரங்கம்தான்.. கிழவியின் முதுகில் கத்திரிக்காய் எறிந்தவர்!!!

இந்தப் பொன்னுரங்கம்தான் சுருள் கத்தியால் காட்டில் பள்ளம் பறித்தவர்!

அவரைப்பற்றித் துப்புக்கொடுத்ததே சுரேஷ்தான்! அவரைக் கண்டுபிடிக்க உதவியது எது தெரியுமா?

"கணக்கு!!!"

அவரது வலக்கைக் குறை அவரைக் காட்டிக் கொடுத்த மற்றொரு சமாசாரம்.

அநேகமாக, எதற்கெடுத்தாலும் இடது கையை உபயோகிக்கும் உடற்குறை இருந்ததே, அதுதான் அவரது இரண்டாவது எதிரி.

சுரேஷ் கல்லூரியில் மனோதத்துவ சாஸ்திர மாணவன். சேகர் உடற்கூறு சாஸ்திரமும், பௌதிகமும் படிக்கும் கலைஞன். இருவரும் படித்த ஏட்டுக்கல்வியே நாட்டுக்கு உதவியது கடைசியில்! துப்பாக்கிக் காயத்தின் தன்மையைச் சேகர் நன்கு ஆராய்ந்தான் என்று கூறினோமல்லவா? ஜிம்மியின் உடலைத் துளைத்த குண்டு அதன் நடுவயிற்றின் மூலம் புகுந்து, மறுபக்கத்தின் பின்னங்கால் பட்டைவழி

ஆசிரியர்: ஏண்டா, உப்புப் புளி, காப்பிக் கொட்டைக் கணக்கெல்லாம் எழுதிக் கொண்டு வந்திருக்கிறாய்?

கோபு: நீங்கதானே ஸார், வீட்டுக் கணக்கைப் போட்டுக் கொண்டு வரச் சொன்னீர்கள்?

—வி. பி. சுப்பிரமணியன்,
திருமலைகிரி.

யாக வந்திருந்தது. துப்பாக்கியைச் சாதாரணமாக வலது கையின் ஆரம்பத்தின் அடியில் (ஆர்ம்பிட்) வைத்து அதை அமுக்கியவாறே, இடது கையில் துப்பாக்கியைப் பிடித்துக்கொண்டுதான் சுடுவது வழக்கம். அப்படியிருந்தால் நிச்சயம், வலதுபக்கம் சாய்வாக ஜிம்மியின் உடலைத் துளைத்துச் சென்றிருக்க முடியாது. அதற்கு மாறாக இடதுபக்கச் சாய்வே ஏற்பட்டிருக்கும். ஆகவே துப்பாக்கியை உபயோகித்தவன் இடதுபக்க 'ஆர்ம்பிட்'டில்தான் அதை இடுக்கிக் கொண்டு குறி வைத்திருக்க வேண்டும். அந்நிலையே தனக்குச் சௌகரியமென அவன் கருதியிருப்பதால் வலதுகைக் குறை அவனுக்குள்ளது என்பதில் சந்தேகமில்லை.

இரண்டாவதாக,—

பௌதிக சாஸ்திரத்தில், வெலாஸிடி, நியூடனின் 'அசைவு'

பற்றிய விதிகள் என்ற பாடங்கள் உண்டு. அதன்படி ஒரு விசைக்கு எதிர்விசை உண்டு. இரண்டும் சமம். அதாவது, ஒரு ரப்பர்ப் பந்தை நாம் எந்த வேகத்தில் அடிக்கிருேமோ (சுவரை நோக்கி) அதே வேகத்தில்தான் அது திரும்பும்.

அதேபோல, ஜிம்மிக்குக் கல்லடியால் ஏற்பட்டக் காயத்தை நன்கு ஆராய்ந்திருக்கிருன் சேகர். உடற்கூறு சாஸ்திரத்தின்படி ஜிம்மியின் உடலின் தாங்கும் சக்தியையும், காயத்தின் ஆழத்தையும் கணக்கிட்டு எதிர்விசையைக் கண்டு பிடித்திருக்கிருன்.

மற்றும், தற்செயலாக கிழவியின் முதுகில் இன்ஸ்பெக்டர் கத்தரிக்காயை எறிந்தபோது அவரது இடதுகைக் குறையையும் நேரில் பார்த்துவிட்டான்! ஆகவே பொன்னுரங்கத்தின்மேல் சந்தேகம் உறுதியாயிற்று.

ஏட்டில் படித்த கல்வி நாட்டுத் துரோகியைக் கண்டுபிடித்து விட்டது!

* * *

மற்ருெரு புதிரையும் விடுவிக்க விரும்புகிறேன்! ரெயிலில் செல்லும்போது இன்ஸ்பெக்டர், 'வயர்லஸ் போன்' மூலம் தனது சகாக்களுக்குத் தகவல் அளித்தும் ஏன் முன்னெச்சரிக்கையாகத் தங்கள் திட்டத்தை மாற்றிக்கொள்ளவில்லை என்பது, புதிர்.

கான்ஸ்டபிள்கள் பொன்னுரங்கத்துடன் புறப்பட்டபோது டி.எஸ்.பி., அவர்களிடம் இரண்டு அட்டைப் பெட்டிகளைக் கொடுத்தார் அல்லவா? அவை இரண்டும் இரு 'வயர்லஸ் போன்' ஸெட்டுக்கள்தான். அவைகளில் ஒன்று பிரத்தியேகமாக ரேடியோ என்ஜினீயர்களால் இன்ஸ்பெக்டர் ரகசியமாக வைத்திருந்த ஸெட்டைப் போலவே தயார் செய்யப்பட்டது. ஆனால் அதன் சக்தி மிகவும் நுணுக்கமாக ஆறு விநாடிகளுக்கு மேல் அழிந்துவிடும்படி செய்யப்பட்டது. தஞ்சைக் காபியில் கலந்திருந்த மயக்க மருந்து இன்ஸ்பெக்டரைத் தூக்கத்தில் போட்டதும் பிரத்தியேக ஸெட்டை இன்ஸ்பெக்டருடையதற்குப் பதிலாக மாற்றிவிட்டனர் கான்ஸ்டபிள்கள். அது தெரியாத இன்ஸ்பெக்டர் ''ஒன், டூ, த்ரீ......த்ரீ, டூ, ஒன்'' என்ற ஸிக்னலுடன் வயர்லஸை இயக்க ஆரம்பித்தார். அப்போது 'ஸெட்' டில் சக்தியிருந்ததால் அதே ஸிக்னல் மூலம் பதில் கிடைத்தது. செய்தியைப் பொன்னுரங்கம் ஏழாவது ஸெகண்டில்தான் தெரிவிக்க ஆரம்பித்ததால் அதன் சக்தியின்மை அவருக்குத் தெரியவில்லை. செய்தி தெரிவித்தாகிவிட்டது என்ற சந்தோஷத்தில் இருந்தார்.

மற்ருெரு விஷயம்: இன்ஸ்பெக்டர் ரகசியமாக வைத்திருந்த 'ஸெட்'டின் தன்மை எவ்வாறு டி.எஸ்.பி.க்குத் தெரிந்தது என்ற சந்தேகம்.

பலமுறை டி. எஸ். பி. தம் அறைக்குத் தருவித்து இன்ஸ்பெக்டருடன் பேசிக்கொண்டிருந்தபோது மிகவும் சக்தி வாய்ந்த எக்ஸ்ரே கதிர்கள் பொன்னுரங்கத்தின் 'ஸெட்'டைப் படம் எடுத்துக்கொண்டிருந்தனவே! டி. எஸ். பி. பொன்னுரங்கத்தை அலைக்கழித்ததற்குக் காரணமே இதுதானே!

மேலும், பொன்னுரங்கத்தைப் பின்தொடர நியமிக்கப்பட்டிருந்த பம்பாய் அதிகாரியும் தகுந்த தகவல்களைக் கொடுத்திருந்தார்.

'ஆர்தர் ஸ்மித்' ஸ்விட்ச் போர்டை நோக்கித் தாவிய மர்மம் இதுதான்! தங்கள் தோல்வி நிச்சயம் என்ற செய்தி அனுப்பியவுடன் பாதாளச் சுரங்கத்தை நாசம் செய்யும்படி முன்னேற்பாடு. ஸ்விட்ச் போர்டின் சக்தி அழியும் சக்தியே. இதை முன்பே எதிர்பார்த்த டி. எஸ். பி.யின் ஆட்கள் ஆர்தர் ஸ்மித்தைச் சரியான சமயத்தில் கைது செய்து விட்டனர்.

சுரங்கத்தில் காணப்பட்ட தஸ்தாவேஜுகளிலிருந்தும், அங்கே அடுக்கடுக்காகக் காணப்பட்ட ரூபாய் நோட்டுக் கட்டுக்களிலிருந்தும், அரசாங்கத்தில் உள்ள எதிரிகளின் உளவாட்கள் காட்டிக் கொடுக்கப்பட்டு விட்டனர். ஆம்! அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்கும்போது அந்த

ரூபாய் நோட்டுகளின் நம்பர்கள் ரெகார்டில் குறிக்கப்படுவது வழக்கம். அந்த ரெகார்டில் உள்ள நம்பர்களிலும், சுரங்கத்திலுள்ள கட்டுகளில் உள்ள நம்பர்களிலும் ஒரே மாதிரியாயுள்ளவற்றை, சம்பளமாக அரசாங்கத்திலிருந்து பெற்றவர்கள் விசாரணைக்குட்படுத்தப் பட்டனர்!

டி. எஸ். பி. 'ராங் நம்பர்' என்று பொன்னுரங்கத்திடம் கத்திஞரல்லவா? உண்மையில் அது ராங் நம்பரல்ல, சரியான நம்பர்தான். இன்ஸ்பெக்டரின் கூட்டாளியின் போன் நம்பர்தான்! கூட்டாளிக்கு அறிவிக்க விரும்பிய இன்ஸ்பெக்டர் முயற்சியில் தோல்வி யடைந்தார். ஆனுல்....அந்த நம்பரைக் கண நேரத்தில் குறிப்பெடுத்துக் கொண்ட டி.எஸ்.பி. குறிப்பிட்ட போன் சொந்தக்காரரை சதியில் சம்பந்தப்பட்டவராகக் கைது செய்ய முடிந்தது! மற்றொன்று: பாங்கில் காணப்பட்டவர் அரசாங்கத்தாரால் நியமிக்கப் பட்ட 'டூப்ளிகேட்' பொன்னுரங்கம். அவரை உண்மையாக நம்பி எதிரிகள் அவரிடம் கொடுத்தப் பெட்டி பேனாப் பெட்டியல்ல. பேனா உருவில் இருக்கும் (டைம் பாம்) கால வெடிகுண்டுகளே! 'டூப்ளிகேட்' இன்ஸ்பெக்டர் இதை எதிர்பார்த்திருந்தார். ஆகவே அதைப் பதுக்கி வைத்துவிட்டு உண்மைப் பேனாப் பெட்டியொன்றையே அதற்குப் பதிலாக உபயோகித்துவிட்டார்! 'டைம் பாம்' தன் சொரூபத்தைக் காட்டிப் பத்து நிமிஷத்தில் பாங்கி கட்டடத்தைத் தகர்க்காததன் மர்மம் இதுதான்!

படுக்கையறைச் சம்பவம் போன்ற முட்டாள்தனமான காரியத்தைச் செய்ய கெட்டிக்காரர்களான பறங்கியர்களால் எப்படி முடிந்தது?

உண்மை அதுவல்ல..சுரேஷ் படுக்கையில் படுத்திருந்தாலும்கூட அவனைக் கொல்லுவதாக அவர்கள் தீர்மானமில்லை. அவனது அருகிலேயே படுக்கையில் செருகிவிட்டுப் போவதாக அவர்கள் எண்ணம். சுரேஷின் இடமாற்றத்தைக் கண்டு நகைத்த 'முகமூடி' படுக்கையிலேயே கடைசியில் குத்திவிட்டுச் சென்றது!

சுரேஷைச் சுட்டிருக்கலா மென்றால் ஜிம்மியைப் பழிதீர்த்தபோதே செய்திருக்கலாமே! கடிதம், படுக்கையில் கத்தி, ஜிம்மியின் மரணம் யாவும் சுரேஷுக்கு எச்சரிக்கை செய்யவே! ஆனாலும் கடைசியில் முயலை ஆமை வென்ற கதையாகி விட்டதே!

டி.எஸ்.பி. விஷயங்களைக் கூறி முடித்ததும் கூட்டத்தினரை ஒருமுறை பார்த்தார். திடீர் முனிவர் ஒருவர் பிரசன்னமாகி அவர்களைக் கல்லாகச் சபித்துச் சென்றிருந்தார் என்பது பிறகே தெரிந்தது!

* * *

'சுரேஷ் எழுந்திருந்தான். விண்ணே அதிரும்படியான கரகோஷம்! "மதிப்பு வாய்ந்த சபையோர்களே!" என்று கம்பீரமாக ஆரம்பித்தான்; கரகோஷமும் ஓய்ந்தது!

"நான் செய்த காரியம் அற்பம். தற்பெருமைக்காகக் கூறிக்கொள்ளவில்லை. எங்கள் ஆராய்ச்சி, பெரிய சேவையில் முடிந்ததை நானறிவேன். ஆனுல்...எங்களைத் தூண்டியவன் யார்?

"அவன்தான் இறைவன். அவனுக்கு நன்றி செலுத்துவோமாக." (கரகோஷம் விண்ணைப் பிளந்தே விட்டது.)

சுரேஷ் மறுபடியும் தொடர்ந்தான். "'நல்ல காரியத்தை நினை. நல்லபடியே முடியும்' என்பது பெரியோர் வாக்கு. நாங்கள் புயலால் தாக்கப்பட்டுத் தத்தளித்த ஜனங்களுக்கு உதவி புரிய நினைத்தோம். கடைசியில் பெரும் நன்மையில் கொண்டுவந்து சேர்த்தது எங்கள் செய்கை! (மறுபடியும் ஆரவாரம்). இறைவன் ஜிம்மியின் உருவில் எங்களுக்கு உதவி புரிந்தார். சுழலாக வந்து என்னைத் தனியே கொண்டு சென்றார். ஜிம்மியின் உருவிலே

ஒருவர்: உன் பையனுலே என் பையனும் சேர்ந்து இந்தப் பரீட்சையிலே பெயிலாப் போயிட்டான்.

மற்றவர்: அட சரிதாண்டா போடா, அந்தக் காலத்துலே உன்னுலேதானே நான் பரீட்சையிலே கோட் அடிச்சேன்! ரொம்ப நல்லவன் மாதிரிப் பேசறியே!

வந்து என்னைத் தப்புவிக்கவும் செய்தார். இந்த இரண்டும்நடக்கவில்லையேல்..? நான் தங்கள் முன்பு பேசிக்கொண்டிருக்க முடியாது தற்சமயம். ஆம். ஜிம்மியின் பங்குதான் முக்கியம் இதில். தற்போது அது இல்லை. (சுரேஷின் கண்கள் நீரால் நிரம்பியது. தொண்டை கம்மியது.)

''நான் அறியாமல் தினசரி அது இவ்வேலையில் பங்கெடுத்துக் கொண் டிருக்கிறது. 'சதிகாரரை'ப் பின் தொடர்ந்திருக்கிறது. சதிகாரரைக் கண்டு பிடிக்க முயன்ற அது அம் முயற்சிக்காகவே உயிரையும் அர்பணித்தது.

"உயிர் கொடுத்தும் தன் முயற்சியில் வெற்றியே கண்டது அது. கல்லால் அது அடைந்த காயமும், குண்டு துளைத்த அதன் உடலும் இல்லையேல்.... நமக்கு வெற்றி ஏது? மற்ருெரு செய்திதான் பேப்பரில் வந்திருக்கும் 'திருச்சி பாங்கில் பெரும் கொள்ளை' என்பது. தற்போது நாம் சதிகாரக் கும்பலை அடியோடு கண்டு பிடிக்க முடிந்தது. ஜிம்மியின் உயிர்த் தியாகத்திஞலும் நண்பன் சேகரின் அபார கணித ஞானத்தாலும்தான். அந்த எளிய கிழவியும் தன் பங்கு உதவியை நமக்கு மறைமுகமாக இங்கே அளித்திருக்கிருள். அவளுக்கும் நாம் உதவ வேண்டும்.

''நாம் செய்ய வேண்டியது என்ன?

''நாட்டிற்காக உயிரைத் தியாகம் செய்த எனது நண்பன் ஜிம்மிக்குத் தகுந்த முறையில் ஞாபகார்தம் எழுப்புங்கள். அது மரணமடைந்த தினத்தை ஆண்டுக்கொரு முறை பக்தியுடன் நினைவு கூறுங்கள். மனிதனைவிட மேம்பட்ட இனம் அது. இதுவே என் வேண்டுகோள்''

''செய்வோம்'' என்ற சொல் ஒரே குரலில் எழுந்தது அவர்களிடமிருந்து.

* * *

அரசாங்கத்தின் முயற்சியால் திருச்சியின் கண் போன்ற அழகான கிளைவ் லைன் ஒளி மத்தியில் கம்பீரமான சலவைக்கல் ஸ்தூபியின்மீது அழகிய ஜிம்மியின் அந்தச் சிலை நிறுவப்பட்டது.

ஆகஸ்ட் மாதம் பதினைந்து.

பொதுமக்களின் கண்கள் பட்டொளி வீசிப் பறக்கும் மணிக்கொடியையும், ஜிம்மியையும் பார்த்துப் பேரானந்தம் எய்திக் கொண்டிருக்கின்றன.

அவர்களின் உதடுகள் சிலையின் அடியில் காணப்படும், ''உனது பெருமையும் புகழும் உனது அழகிய விழிகளில் பிரதி பலிக்கின்றனவே'' என்ற மேனுட்டுக் கவி மில்டனின் வாக்கைப் படித்துக்கொண் டிருக்கின்றன. சுபம்!

நீங்களும் நானும்

[இந்தப் பகுதியில் உங்களுக்குத் தோன்றும் சந்தேகங்களையெல்லாம் கேட்கலாம். எனக்குத் தோன்றியவைகளைச் சொல்கிறேன். வேடிக்கை விளையாட்டுக் கேள்விகளாக இருக்கலாம்; ஆனால் பிறரைப் புண்படுத்தாத முறையிலும், கூடுமானவரையில் உங்களுக்குப் பயன் படக்கூடிய கேள்விகளாகவும் கேளுங்கள். —ஆர்வி.]

எஸ். சங்கரலிங்கம், திருச்சி-2.

கே: மைக்ராபோன் செய்யும் விதம் கண்ணனில் வந்தது. ஆனால் காதொலிக் கருவி செய்யும் விதம் எப்படி?

ப: காதொலிக் கருவி செய்யும் விதம் எப்படி என்று நூற்றுக்கணக்கான கடிதங்கள் வந்திருக்கின்றன. சென்ற வருஷம் கண்ணனில் அதை வெளியிட்டிருக்கிறோம். அந்த இதழ் கைவசம் இல்லாததால் அந்தக் கட்டுரையை அடுத்த இதழில் வெளியிட எண்ணியிருக்கிறேன்.

ஜே. திருக்குமாரவேல், கொழும்பு.

கே: உலகில் எத்தனை மொழிகள் பேசப்பட்டு வருகின்றன?

ப: கிட்டத்தட்ட இரண்டாயிரம் மொழிகளுக்குமேல் இருக்கின்றனவாம். சரியான விவரம் இன்னும் தொகுத்து முடியவில்லை.

நா. கோபாலகிருஷ்ணன், பாளையங்கோட்டை.

கே: சாதாரண காமிராவை சினிமாப்படம் எடுக்கும் காமிராவாக மாற்ற முடியுமா? அதிலே பேசுவதற்கு வேண்டிய கருவிகள் செய்து அமைக்கமுடியுமா?

ப: முடியாது; இரண்டும் வெவ்வேறு விதமான அமைப்புக் கொண்டவை.

ஜே. லலிதா, திரணி.

கே: எங்கள் ஊருக்கு நீங்கள் வருவீர்களா?

ப: உங்கள் ஊரின் பெயரை நான் இப்போதுதான் முதல் முதலாகக் கேள்விப்படுகிறேன். இருந்தாலும் உன் கல்யாணத்தின்போது பத்திரிகை அனுப்பு. வழி பார்த்து வர முயல்கிறேன்.

எ. மீர்ஸா இஸ்மெயில், தென்காசி.

கே: ஐ. நா. என்பது என்ன?

ப: இரண்டே காலுள்ள சபை. அமெரிக்காவின்மீது ஒரு காலும் ரஷ்யாவின் மீது ஒரு காலும் வைத்துக்கொண்டு அது இப்போது சவாரி செய்கிறது. அதைச் சமயம் பார்த்துக் கீழே தள்ளுவதிலும் குழி பறிப்பதிலும் அந்த இரண்டு பெரிய நாடுகளும் முழுமூச்சுடன் முயன்றுவருகின்றன.

கிருஷ்ணு, திருவாரூர்.

கே: கொசுக்களில் எது வியாதியைப் பரப்புகின்றன?

ப: பெண் கொசுக்களால்தான் வியாதிகள் பரவுகின்றன. ஆண் கொசுக்கள் மனிதர்களையோ பிராணிகளையோ கடித்து ரத்தத்தை உறிஞ்சுவதில்லை. அவை தேனையும் செடி, கொடிகளிலுள்ள ரசங்களையுமே குடிக்கின்றன.

என். எஸ். குமார், பங்களூர்-8.

கே: ராஜாஜியைப் பெரிய அறிவாளி என்று முதல் முதலில் அறிந்தவர் காந்திஜிதானே?

ப: அதற்கும் முன்பு ராஜாஜி கல்லூரி மாணவராக இருந்தபோதே சுவாமி விவேகானந்தர் அவரை அறிவு மிக்கவர் என்று பாராட்டியிருக்கிறாராம்.

ஏ. பி. ஜனகராஜு, ஆனைமலை.

கே: பூ மணக்கிறது; தேன் இனிக்கிறது; வேம்பு கசக்கிறது. ஏன்?

ப: அதனதன் இயற்கைத் தன்மைப்படி. எல்லாம் கலந்ததுதான்

உலக வாழ்க்கையும் இயற்கையும் என்று நமக்குக் காட்டத்தான்.

ஏ. கே. துரைவேலு, அம்பத்தூர்.

கே: அழகின் பிறப்பிடம் எது?

ப: தூய்மை நிறைந்த உள்ளம்.

டி. வி. மோகனசுந்தர், குடியேற்றம்.

கே: பகுத்தறிவையும் சிந்தனையையும் ரூபாயில் மதிப்புப் போட்டால் எதற்கு மதிப்பு அதிகம்?

ப: சிந்தனைச் சக்தியின் குழந்தைதான் பகுத்தறிவு. சிந்தனைச்சக்தி மூன்று காலத்திலும் ஊடுருவிப் பாய்ந்து செல்லும் தன்மையுடையது. பகுத்தறிவு எதிரேயுள்ள நிகழ்காலத்தை ஆராய்ந்து உணர்வது. எனவே தங்கக் கட்டியையும் முத்திரைப் பவுனையும் சிந்தனைச் சக்திக்கும் பகுத்தறிவுக்கும் உவமையாகக் கொள்ளலாம்.

குமாரி கோ, அ. சாவித்திரி, புதுடில்லி.

கே: கண்ணன் அட்டைப் படத்துக்கு எந்த மாதிரிப் புகைப்படங்கள் தேவைப்படுகின்றன?

ப: குழந்தைகளுடைய கண்ணுக்கும் கருத்துக்கும் இனிமை பயக்கும் புகைப்படங்கள்தான்.

து. கருணையானந்தம், யாழ்ப்பாணம்.

கே: ஆத்மிகம் என்றால் என்ன?

ப: ஆத்மா சம்பந்தப்பட்ட விஷயங்கள் என்று பொருள்.

கே. விசுவலிங்கம், தெய்யோவிற்ற (இலங்கை).

கே: முதல் அணுக்குண்டு வீச்சு எப்பொழுது எங்கே நடந்தது? சமீபத்தில் எங்கே நடந்தது?

ப: இரண்டாவது உலக யுத்தத்தின் கடைசியில் (1945-இல்) ஜப்பானில் உள்ள ஹிரோஷிமா, நாகசாகி என்ற நகரங்களில் அமெரிக்கா அணுக்குண்டுகளை வீசியது. இரண்டாவது உலக யுத்தம் முடிவுற்றதற்கே அந்தக் குண்டு வீச்சுகள்தான் காரணம். சமீபத்தில் நடந்தது குண்டு வீச்சு அல்ல. அது அணுக்குண்டு வெடிக்கும் பரீட்சை. பசிபிக்கில் கிறிஸ்துமஸ் தீவுகளில் பிரிட்டன் நடத்தியது. இன்புளுவென்ஸா தொற்று நோய்க்கு அந்த அணுக்கதிரியக்கமே காரணமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

எஸ். பார்த்தசாரதியும் நண்பர்களும், திருக்கோயிலூர்.

கே: கண்களிலும் காகிதங்களிலும் தீட்டக் கூடியது மையா, பையா? (கண்ணன் இதழில் பை என்று வெளியாகி யிருக்கிறது)

ப: பையா, மைதான்; அது அச்சுப் பிழை. காலொடிந்த மை, மை படாது பையாகிவிட்டது.

எஸ். போஜராஜன், சென்னை-7.

கே: ஐயா, உங்களைப் பதினறு கேள்விகள் கேட்கலாம் என்றிருக்கிறேன். விடை தருவீர்களா?

ப: அவற்றில் ஒன்றுகூடவா விடைகூறத் தகுதியற்றதாகிவிடும்? ஆகவே தாராளமாகக் கேட்கலாம். பதினறு வரம் கேட்டால் கூட எனக்கு ஆக்ஷேபம் ஒன்றுமில்லை. தாராளமாகக் கொடுப்பேன். ஆனல் பலிப்பது உன் அதிருஷ்டம்.

ஜி. ஜயராகவன், கூந்தலூர்.

கே: நட்சத்திரங்கள் விட்டு விட்டுப் பிரகாசிக்கின்றனவா?

ப: இல்லை. பல ஒளி வருஷங்களாகத் தொடர்ந்து பிரகாசிக்கின்றன.

வகிரன், பேராவூரணி.

கே: அண்ணு, நான் என்னுடைய கதைகளையும் கேள்விகளையும் தங்களுக்கே அனுப்ப விரும்புகிறேன். பிரசுரிப்பீர்களா?

ப: தம்பி, உன் விருப்பம் வெறுப்பாக மாறிவிடக் கூடாதே என்று இப்போதே கவலையாக இருக்கிறது எனக்கு. இப்படிக் கேட்டுக் கொண்டு அனுப்புபவர்களின் சரக்கு பொதுவாக அத்தனை தகுந்ததாக இருப்பதில்லை.

டி. டி. வாசுதேவன், சேத்துப்பட்டு.

கே: மா. பொ. சி., அண்ணுதுரை, காமராஜ் ஆகிய இந்த மூவரில் சிறந்த தலைவர் யார்? அரசியல் கேள்வி என்று எண்ணுமல் பொதுஅறிவுக் கேள்வியாக எண்ணி விடை தர வேண்டுகிறேன்.

ப: அபிப்பிராய பேதம் இருக்கலாம். ஆயினும் இந்த மூவரில் இப்போதைக்குக் காமராஜ்தான் என்பது என் அபிப்பிராயம். இதற்குக் காரணம், என்றும் செய்ந்நன்றி மறவாத நல்ல பண்பு அவரிடம் இருக்கிறது. பேச்சுத்திறனல் அவர் தலைவராகிவிடவில்லை; உழைப்பா

கிற மூச்சுத்திறனால் முன்னுக்கு வந்தவர்.

எ. ஏசுமணிடார்லன், இருகூர்.

கே: குண்டு வீசும் விமானம் கட்ட என்ன செலவாகும்?

ப: இதற்கு ஐஸன்ஹோவரே ஒரு சமயம் பத்திரிகையாளரிடம் பதில் கூறியிருக்கிறார். அவர் பதில் இது தான்: ''அதற்கு ஆகும் செலவைக் கொண்டு 30 நகரங்களில் நல்ல பள்ளிக்கூடக் கட்டடங்கள் கட்டலாம். 60 ஆயிரம் மக்கள் கொண்ட இரண்டு நகரங்களுக்கு வேண்டிய மின்சார உற்பத்திக் கூடம் அமைத்துவிடலாம். எல்லா வசதிகளும் உள்ள இரண்டு பெரிய வைத்தியசாலைகள் அமைக்கலாம். 50 மைலுக்கு நல்ல சிமெண்டுச் சாலை போட்டுவிடலாம்.'' இவ்வளவும் குண்டு வீசும் ஒரு விமானத்துக்காகச் செலவு செய்யும் தொகைதான். இப்படி எத்தனையோ ஆயிரக்கணக்கான விமானங்களுக்குப் பல நாடுகளிலும் யுத்தத்தையும் தடுப்பையும் முன்னிட்டுப் பொருள் செலவாகிவருகின்றன.

டி. வி. ஆர்., சேத்துப்பட்டு.

கே: தாழ்ப்பாளின் கீழே கோபாலசாமி. இது என்ன?

ப: எனக்குத் தெரியாது என்று விடுகதை போடுகிறாய்? 'சுரீர்' என்று கொட்டினால் உன் வீடே அதிரும்படி அலறுவாயே தம்பி, அதுதான் விஷக் கொடுக்குள்ள தேள்.

எம். எஸ். சுப்பிரமணியம், ஆரணி.

கே: உலகத்திலேயே அழகான கட்டடம் எது?

ப: தாஜ்மஹல்தான்.

மு. சுல்தான், ஆவூர்.

கே: மனிதன் உயிர் வாழ்வது எதற்கு?

ப: அதில்தான் பலருக்குக் குழப்பம். உயிர் வாழ்வதற்காகச் சாப்பாடு என்று ஒரு சிலரும், சாப்பாட்டுக்காக உயிர் வாழ்வது என்று மிகப் பலரும் எண்ணுகிறார்கள்.

வி. நாகராஜன், திருவல்லிக்கேணி.

கே: ஐயன்மீர், மின்சாரக் கருவிகள் செய்யும் விதத்தைப் பற்றி எழுதும் ஈ. ஜி. என். என்பவருடைய விலாசத்தை அன்பு கூர்ந்து அனுப்புவீர்களா?

ப: உங்கள் இருவருக்கும் ஊரும் பேரும் ஒன்றுதான். இனிஷியலும், தெருவும்தான் வேறு வேறு. ஈ. ஜி. என், 30, கிருஷ்ணப்ப முதலித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

இரா. உதயசூரியன், கொல்லுமாங்குடி.

கே: மனிதன் எப்பொழுது அறிவை அலட்சியம் செய்கிறான்?

ப: ஜனநாயகம் என்ற பெயரில் கும்பலாகச் சேர்ந்து கை தூக்கும்போது.

எஸ். இராதாகிருஷ்ணன், சின்னாளப்பட்டி.

கே: 'தமாஸ்' செய்திகளை லெட்டரில் எழுதலாமா?

ப: சும்மா தமாஷாக ஊரிலிருந்து கையிலேயே எடுத்துக்கொண்டு நேரில் வந்துவிடாதே.

அ. பாஸ்கரன், ஏழுகிணறு.

கே: பாகிஸ்தான் ஜனத்தொகை எவ்வளவு?

ப: சுமார் எட்டுக் கோடி.

என். அரங்கராஜி, அந்தியூர்.

கே: நீங்கள் ஏன் என் கேள்விகளுக்குப் பதில் சொல்லவில்லை?

ப: பள்ளிக்கூடப் பாட புத்தகக் கேள்விகளையெல்லாம் கேட்டால் அதற்கெல்லாம் இந்தப் பகுதியில் இடம் ஏது?

ஸி. ஏ. அப்துல்மஜீத், சிதம்பரம்.

கே: கதைகள் மலிந்த நாடு எது?

ப: இந்தியாதான். நல்ல கதைகளும் சரி, உருப்படாக் கதைகளும் சரி, இங்கே மலிந்துதான் இருக்கின்றன. பொழுது போகாத போனால் படிப்பது என்று இருந்தவர்கள் இப்பொழுது கதைகள் எழுதுவது என்று ஆரம்பித்து விட்டதனால் இந்தக் காலத்தில் அக்கப்போர்கள் அடுப்பங்கரை விஷயங்கள் எல்லாம் கதைகளாக இன்னும் மலிந்திருக்கின்றன.

மா. அருணாசலம், வல்லம்.

கே: மனிதனுக்குப் பேசும் தன்மையை இறைவன் அளித்தது எதற்காக?

ப: நிச்சயம் ஒருவரை ஒருவர் திட்டிக்கொள்வதற்காக அல்ல. கூடி வாழ்ந்து இறைவன் பெருமையை எண்ணிப் பேசி இன்பதுன்பங்களைப் பகிர்ந்து கொள்வதற்காக!

நல்ல வீடு

'லெமன்'

மணி: வீடு சின்ன வீடு
வீரா சாமி 'ரோடு';
விளக்கும் 'பைப்'பும் இருக்கு; காற்று
வெளிச்சம் உள்ள வீடு!

தெற்குப் பார்த்த வாசல்;
தென்னங் கீற்று ஊசல்;
அக்கம் பக்கம் மனிதராலே
இல்லே சண்டை பூசல்!

பள்ளிக்கூடம் கிட்டே;
'பஜா'ரும் 'பார்க்'கும் கிட்டே; ஒரு
வெள்ளி செவ்வாய் போய்வரலாம்
வேலன் கோயில் கிட்டே!

கிட்டு: ஆனல் உடனே போயி
'அட் வான்சு' கொடுக்கலாமே;
போனல் போகுது அஞ்சு பத்து
போட்டுக் கொடுக்க லாமே!

மணி: கேட்டுப் பார்த்து விட்டேன்;
கெஞ்சிப் பார்த்து விட்டேன்;
வீட்டுக்காரன் சொல்ருன், வீடு
வாடகைக்கு இல்லே!

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

புதிய நாணய விகிதப்படி

கண்ணன் வெளியீடுகள்

ஐந்து வயது முதல் பதினாறு வயது வரையில் உள்ளவர்களுக்காகப் பல அழகான கண்ணன் வெளியீடுகள் உள்ளன. இதோ அந்தப் பட்டியல்:—

		ரூ. நயா பைசா
1.	லீடர் மணி - ஆர்வி ..	1.50
2.	சந்திரகிரிக் கோட்டை - ஜனா ..	1.25
3.	அசட்டுப் பிச்சு - ஆர்வி ..	1.00
4.	சின்ன ராஜா - வாசகன் ..	0.75
5.	பவழவல்லி - கி. ரா. ..	0.75
6.	விளையும் பயிர் - கி. வா. ஜ. ..	0.50
7.	சமர்த்து மைனா - தி. ஜ. ர. ..	0.50
8.	அபாயச் சங்கு - நீலம் ..	0.50
9.	ஜக்கு - ஆர்வி ..	0.50
10.	ஜம்பு - ஆர்வி ..	0.50
11.	ஏரிக்கரை மாளிகை - ஜனா ..	0.50
12.	மின்னல் அரக்கன் - ஜனா ..	0.50
13.	ராஜாவும் குருவியும் - 'சோமசன்மா' ..	0.50
14.	கழுகும் கிளியும் - 'சோமசன்மா' ..	0.50
15.	தவளையும் காளையும் - 'சோமசன்மா' ..	0.50
16.	விஞ்ஞானம் பேசுகிறார் - பெ. நா. அ. ..	0.50
17.	பாரஸீக ரோஜா - ஆர்வி: ஸாமி ..	0.32
18.	தூங்கும் அழகி - ஆர்வி: ஸாமி ..	0.25
19.	குளிகைத் தீவு - ஆர்வி: சங்கர் ..	0.25
20.	மாஸ்டர் பாலகுமார் - ஆர்வி: ஸாமி ..	0.25
21.	நீச்சல் பழக்கம் - டிமான்ஸ்டிரேட்டர் ..	0.20
22.	பார்வதியும் ஏழு சித்திரக்குள்ளர்களும் - எஸ். ஜே. ..	0.20
23.	கோழி விதைத்த நெல் - சூடாமணி ..	0.20
24.	தங்கத்தின் பந்து - சூடாமணி ..	0.20
25.	என் பேர் என்ன? - சூடாமணி ..	0.20
26.	கவிஞர் கதை - கி. வா. ஜ. (அச்சில்) ..	
27.	தங்க மாம்பழம் - ராஜி (அச்சில்) ..	
28.	புலிக் குட்டி - ஆர்வி: ஸாமி (அச்சில்) ..	

சந்தாதாரர்களுக்குக் கமிஷன் உண்டு.

கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை-4.

(Regd. as Newspaper in Ceylon.) Reg. No. M. 5542

கண்ணன்

சித்திரப் போட்டி

கண்ணன் பத்திரிகையில் உங்களுக்காகப் புதிய சித்திரப் போட்டி ஒன்றை வெளியிடுகிறோம். கதை, கட்டுரைப் போட்டிகளில் கலந்து கொண்ட உங்களுக்கு இந்தப் போட்டி மிகவும் மகிழ்ச்சி தரும் என்று நம்புகிறோம்.

இந்தப் போட்டியில்—

- ★ ஐந்து வயது முதல் பதினாறு வயதுவரையுள்ளவர்கள்தான் கலந்துகொள்ளலாம்.
- ★ படங்கள் அனுப்புபவர்கள் தொடர்ந்து மூன்று இதழ்களில் வெளிவரும் கண்ணன் கழகக் கூப்பன்களில் மூன்றைப் பூர்த்திசெய்து படங்களுடன் இணைத்து அனுப்பவேண்டும்.
- ★ படங்கள் டிராயிங் பேப்பரில் ஒரே பக்கத்தில் வரையப்பட்டிருக்கவேண்டும்.
- ★ படங்களுக்கு உங்களுக்குப் பிடித்தமான, பொருத்தமான தலைப்பை நீங்களே கொடுக்கவேண்டும்.
- ★ வர்ணப் படங்கள் அனுப்புபவர்கள் வாட்டர் கலர் பெயிண்டைதான் கொடுக்கலாம். வேறு வகை வர்ணங்கள் உபயோகப்படுத்தலாகாது.
- ★ ஒருவர் மூன்று படங்கள் வரையில் அனுப்பலாம்.
- ★ ஜூலை மாதம் 31-ஆம் தேதிக்குள் படங்களை எங்களுக்குக் கிடைக்கும்படி அனுப்பவேண்டும்.

இவ்வளவுதான் நிபந்தனைகள். பரிசுக்குரிய படங்களை, கலைமகள் கண்ணன் ஓவியக் குழுவினர் பரிசிலனை செய்வார்கள். இந்தப் போட்டி சம்பந்தப்பட்ட மட்டில் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. படங்களுக்குப் பின்புறத்திலோ அடியிலோ உங்கள் வயசு, பெற்றோர், விலாசம் முதலிய வற்றைத் தெளிவாகக் குறிப்பிடவேண்டும். தேர்ந்தெடுக்கப் படாத படங்களைத் திரும்பப் பெற விரும்புவோர் போதிய தபால் தலை வைத்திருக்கவேண்டும்.

மொத்தம் வயதுவாரியாக ஆறு பரிசுகள் உண்டு. மற்றவை பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படலாம். அதற்கும் உரிய சம்மானம் உண்டு.

கண்ணன் சித்திரப்போட்டி முடிவு ஆகஸ்டு மாத இதழில் வெளியாகும்.

கண்ணன் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை-4.